பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 103

ஞாயிற்றுக்கிழமை
09 மார்ச் 2025

மாசி 25 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## தவறான முடிவெடுத்து சிறுவன் உயிரிழப்பு!

யாழ்., மார்ச் 9
கரவெட்டி மேற்கு, மத்தொனிபகுதியில்நேற்று முன்தினம் தூக்கிலிருந்து சிறுவனொருவனின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. 14 வயதேயான அந்தச் சிறுவன் தவறான முடிவெடுத்து உயிரிழந்திருக்கலாம் என்று தமது முதற்கட்ட விசாரணையின் அடிப்படையில்

14



# படையினரிடம் ஒப்படைக்கப்பட்ட எங்களின் பிள்ளைகள் எங்கே?

## கோத்தாபய கடற்படை முகாமுக்கு முன்பாக நேற்றுத் தீவிரபோராட்டம்!

முல்லைத்தீவு, மார்ச் 9
படையினரின் கரங்களில் ஒப்படைக்கப்பட்ட காணாமற்போன தமது உறவுகளுக்கு என்ன நடந்தது? என்பதை வெளிப்படுத்துமாறு கோரி நேற்றுத் தீவிரபோராட்டம் இடம்பெற்றது.

14

## இரவில் பெண்களிடம் அத்துமீறும் யூடியூபர்!

### அர்ச்சுனா எம்.பி. கண்டனம்

யாழ்ப்பாணம், மார்ச் 9
யாழ்ப்பாணத்தில் வறுமையில் உள்ள குடும்பங்களுக்கு உதவி செய்யும் பாசாங்கில், பெண்பிள்ளைகளிடம் அத்துமீறலில் ஈடுபடும் யூடியூப் பேர்வழிகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா கடும் கண்டனத்தைப் பதிவுசெய்துள்ளார்.
இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று அர்ச்சுனா எம்.பி. தெரிவித்ததாவது:-
வடமாகாணத்தில் சில யூடியூப் பேர்வழிகள் பெண்களிடமும், பெண் குழந்தைகளிடமும்

14




## வடக்கின் பெரும்போரில் சென். ஜோன்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 9
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான வடக்கின் போர் கிரிக்கெட் ஆட்டத்தில், சென். ஜோன்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

14

## கல்சியம் நீக்கியை அருந்தியவர் சாவு!

யாழ்ப்பாணம், மார்ச் 9
யாழ்ப்பாணத்தில் கல்சியம் நீக்கித் திரவத்தை அருந்திய நபரொருவர் சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார். கச்சாய் தெற்கு,

14

## மாணவர்களுக்கு மாவா சந்தேகநபர் கைதானார்

விரிவு :- பக். 14

## தென்னக்கோன் தலைமறைவு தலைகுனிவே!

>> 02

## அதானியை அரசு கைவிடவில்லை!

### வெளியான புதிய தகவல்

கொழும்பு, மார்ச் 9
அதானி நிறுவனத்துடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட காற்றாலை மின்சாரத் திட்டம் இன்னும் இரத்துச் செய்யப்படவில்லை என வலுசக்தி அமைச்சர் குமார

14




### பொன் அணிகளின் போரில்

## யாழ்ப்பாணக் கல்லூரி அசத்தலான வெற்றி!

### 52 வருடங்களின் பின்னர் சாதிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 9
பொன் அணிகளின் போரில் 52 வருடங்களின் பின்னர், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி அபாரமான வெற்றியைப் பதிவுசெய்துள்ளது. வட்டுக்கோட்டை

14

### தேங்காய்த் தட்டுப்பாடு

## 450,000 பேர் வேலையிழப்பு

கொழும்பு, மார்ச் 9
நாட்டில் தற்போது நிலவும் தேங்காய்த் தட்டுப்பாடு காரணமாக 4 லட்சத்து 50 ஆயிரம் பேர் முற்றாகவும், பகுதியளவிலும் வேலைகளை இழந்துள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

14

முச்சந்தி முராரி



'உந்த வெள்ளை ஈ இன்னும் எத்தினை பேரை அவுட்டாக்கப் போகுதோ தெரியேலையே'

## எரிபொருள் நிதியிழப்பு; எதிர்கொள்வது எப்படி?

### கூட்டுறவுச்சங்கங்கள் நேற்றுக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 9
எரிபொருள் விநியோகஸ்தர்களுக்கு வழங்கும் இலாபத்தை அரசாங்கம் 3 வீதத்தால் குறைத்துள்ள நிலையில்,

14

சஞ்சீவி

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 08.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4011 |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கங்கள் | 35 37 41 71 |
| விசேட எழுத்து | X |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 08.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1078 |
| வெற்றி இலக்கினம் | மீனம் |
| வெற்றி இலக்கங்கள் | 11 29 51 57 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 08.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0037 |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கங்கள் | 0 0 4 2 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 08.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2117 |
| ஆங்கில எழுத்து | V |
| சுப்பர் இலக்கம் | 05 |
| வெற்றி இலக்கங்கள் | 31 63 69 73 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 08.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5769 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கங்கள் | 8 7 6 3 3 0 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 08.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1799 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கங்கள் | 14 15 30 47 |
| விசேட எழுத்து | S |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 08.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0344 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கங்கள் | 6 3 3 0 |

# ஒரு குடையின்கீழ் ஐக்கியமாகி தேர்தலை எதிர்கொள்வோம்

## ஐக்கிய தமிழர் ஒன்றியக் கட்சி அழைப்பு

**யாழ்ப்பாணம், மார்ச் 9**

**நடைபெறவுள்ள உள்ளூராட்சிசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியத்தின் நன்மை கருதி அனைத்து அரசியல் கட்சிகளும், சுயேட்சைக் குழுக்களும் ஒன்றிணைந்து தேர்தலை எதிர்கொள்ள வேண்டும் என்றும் 17 சுயேச்சைக்குழுக்களின் இணையமான ஐக்கிய தமிழர் ஒன்றியக் கட்சி பகிரங்க அழைப்பு விடுத்துள்ளது.**

இந்த விடயம் தொடர்பில் கட்சியின் தலைவர் என்.பி.ஸ்ரீந்திரன் விடுத்துள்ள அறிக்கையில்,

வேற்றுமையில் ஒற்றுமை காண்பது போல எங்களுக்குள் இருக்கும் சுயநலம் சார் அகப்புறமுரண்பாடுகளைக் களைந்து பொதுநலநோக்கோடும் தூரநோக்கோடும் சிந்தித்து ஐக்கியப்பட்டு எழுந்து நிற்கவேண்டும். தேர்தலிலும் நாம் ஐக்கியப்பட்டு நிற்போமானால் தென்பகுதிக் கட்சிகள் எம்மண்ணில் கால் ஊக்றுவதைத் தடுக்கலாம்.

தமிழ் வேட்பாளர்களும் வாக்காளர்களும் தமிழ்த் தேசிய உணர்வின்றி விலைபோவதைத் தடுக்கலாம். தமிழ்த் தேசியம் வலுவிழக்காமல் சிதையாமல் இருப்பதற்கு இந்த தடுப்பு மிக அவசியம் என்பதை உணர்வோம். ஐக்கியப்பட்டு நிற்கும் அரிய சாதனைக்காக தமிழ்த் தேசியம் சார் கொள்கைக்காக தமிழ் மக்களின் நிம்மதியாக வாழ்வுக்காக விடிவுக்காக ஐக்கிய தமிழர் ஒன்றியம் என்ற எமது கட்சி அனைத்துத் தரப்பினருடனும் கலந்துரையாடுவதற்குத் தயாராக உள்ளது.

ஒன்றுபட்டு தேர்தல் களத்தில் இறங்கி வெற்றி பெறுவதன் மூலம் தமிழர் வரலாற்றில் புதிய வரலாறு படைக்கலாம்- என்றுள்ளது. (ச-27)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 08.03.2025 |
| தினம் | சனிக்கிழமை |
| வெற்றி வாரம் | 0477 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கம் | 2 2 1 5 9 2 |

| Super Ball DLB | |
|---|---|
| திகதி | 08.03.2025 |
| தினம் | சனிக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2743 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கம் | 09 15 29 74 |

| சனிதா DLB | |
|---|---|
| திகதி | 08.03.2025 |
| தினம் | சனிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கம் | 03 11 40 53 |
| வெற்றி வாரம் | 4904 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | 08.03.2025 |
| தினம் | சனிக்கிழமை |
| வெற்றி வாரம் | 0638 |
| வெற்றி இலக்கம் | 16 27 47 |

| லக்ன ராசி DLB | |
|---|---|
| திகதி | 08.03.2025 |
| தினம் | சனிக்கிழமை |
| சிம்மம் | |
| வெற்றி இலக்கம் | 11 17 32 44 |
| சீட்டிழுப்பு வாரம் | 4455 |

| KAPRUKA DLB | |
|---|---|
| திகதி | 08.03.2025 |
| தினம் | சனிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | P |
| சுப்பர் இலக்கம் | 15 |
| வெற்றி இலக்கம் | 29 34 37 61 |
| வெற்றி வாரம் | 1919 |

| அத கோடிபதி DLB | |
|---|---|
| திகதி | 08.03.2025 |
| தினம் | சனிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கம் | 06 34 43 48 |
| வெற்றி வாரம் | 2569 |

# செவ்வந்தி மாயம் தொடரும் தேடுதல்

கொழும்பு, மார்ச் 9

கொழும்பு புதுக்கடை நீதிமன்றத்தில் பாதாள உலகக் கும்பல் தலைவர் கணேமுல்லே சஞ்சீவ சுட்டுக்கொல்லப்பட்டதற்கு துப்பாக்கியைக் கொடுத்து உதவிய சந்தேகநபரான இஷாரா செவ்வந்தியைத் தேடும் பணி தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் மறைந்திருப்பதாக நம்பப்படும் சுமார் 200 இடங்களில் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதிலும் செவ்வந்தி தொடர்பில் எந்தத் தகவலும் கண்டுபிடிக்க முடியவில்லை. சந்தேகநபர் தென் மாகாண கடற்கரை வழியாக படகு மூலம் நாட்டை விட்டுத் தப்பிச் சென்றிருக்கலாம் என்ற பலத்த சந்தேகம் தற்போது எழுந்துள்ளதாகவும் விசாரணை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ச-இ)

# உயிர்த்த ஞாயிறுத் தகவல் ஞானசாரர் மீது வழக்கு

கொழும்பு, மார்ச் 9

உயிர்த்த ஞாயிறுத் தாக்குல் தொடர்பில் பல்வேறு கருத்துகளை வெளியிட்டு வரும் கலகொட அத்தே ஞானசார தேரரை விசாரிக்குமாறு வலியுறுத்தி குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் வீண்விரயத்துக்கு எதிரான பிரஜைகள் அமைப்பால் இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

அண்மையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது, உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரி யார் என்பது மற்றும் அதனுடன் தொடர்புடைய பல விடயங்களை தாம் அறிந்திருப்பதாக ஞானசாரதேரர் தெரிவித்திருந்தார்.

அத்துடன் இந்த விடயங்களை ஜனாதிபதி உள்ளிட்ட உயர் அதிகாரிகளுக்கு தாம் வெளிப்படுத்தத் தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையிலேயே இந்த விடயம் தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொள்ளுமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் இலஞ்ச ஊழல் வீண்விரயத்துக்கு எதிரான பிரஜைகள் அமைப்பு நேற்று இந்த முறைப்பாட்டை பதிவு செய்துள்ளது. (ச-இ)

# இறுதிப்பேச்சும் தோல்வியெனில் தொழிற்சங்கப் போராட்டம்

## ஜோசப் ஸ்டாலின் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 9

ஆசிரியர்களின் பிரச்சினைகள் தொடர்பில் அரசுடன் நடத்திய அனைத்துப் பேச்சுகளும் தோல்வியில் முடிவடைந்துள்ள நிலையில் இறுதிப்பேச்சிலும் தீர்வு எட்டப்படாதுவிடின் தொழிற்சங்கப் போராட்டத்தில் குதிப்போம் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் வைத்து நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதமர் ஹரிணி அமரசூரிய உட்பட பல தரப்புகளுடன் நடத்திய பல சுற்றுப் பேச்சுகளின் போது உறுதியளிக்கப்பட்ட எந்த விடயங்களும் நிறைவேற்றப்படவில்லை.

இந்தநிலையில் வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு போவதற்கு முன்பான இறுதியாக ஒரேயொரு தடவை பேச்சில் ஈடுபட இலங்கை ஆசிரியர் சங்கம் முயற்சிக்கின்றது.

அந்த முயற்சியும் தோல்வியடைந்தால் ஆசிரியர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவர் - என்றார். (ச-66)

# தென்னகோனின் தலைமறைவு சட்ட ஒழுங்குக்கு தலைகுனிவு

கொழும்பு, மார்ச் 9

முன்னாள் பதில் பொலிஸ் அதிபரை கைதுசெய்ய முடியாத பரிதாப நிலையில் அநுர அரசாங்கம் குற்றவாளிகளைப் பாதுகாக்கும் செயற்பாடுகளில் ஈடுபடக்கூடாது எனத் தெரிவித்து குறித்த கைதின் தாமதம் குறித்து விளக்கமளிக்குமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யவுள்ளதாக மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்களின் தொழிற்சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. இதுதொடர்பில் அதன் தலைவர் மருத்துவ சமல் சஞ்சீவ தெரிவிக்கையில்,

உயிர்த்த ஞாயிறுக் குண்டுத்தாக்குதல், மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி, கடந்த அரசாங்கத்தில் இருந்த நாடாளுமன்ற அமைச்சர்களுக்கு எதிரான பண மோசடி தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் நோக்குடன் ஆட்சிக்கு வந்த அரசாங்கம் தேசபந்து தென்னகோனை கைதுசெய்ய முடியாத பரிதாபநிலையில் உள்ளது.

தேசபந்து தென்னகோனின் தலைமறைவு அரசாங்கத்தின் நிலைப்பாடு, சட்ட ஒழுங்குமுறை மற்றும் இந்நாட்டுப் பாதுகாப்புத்துறை மீதான சந்தேகத்தை வலுப்படுத்தும் வகையில் உள்ளது - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகன இலக்கத்தகடு மக்கள் பார்வைக்கு

யாழ்ப்பாணம், மார்ச். 9

யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்துப் பிரதேச செயலங்களிலும் மாவட்டச் செயலகத்திலுள்ள மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்திலும், வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல், பொதுமக்களின் பார்வைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. மாவட்டச்செயலகத்தின் இணையத்தளத்தினூடாகவும் அதனைப் பார்வையிடமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. வாகன இலக்கத்தகடுகளைப் பெறுவதற்கு https://dmtappointments.dmt.gov.lk எனும் இணையத்தளத்தில் பிரவேசித்து அல்லது 0212117116 எனும் தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி திகதி. நேரத்தை முற்பதிவு செய்து உரிய ஆவணங்களுடன் வருகைதருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)



# பயங்கரவாதச் சட்டத்துக்கெதிராக கையெழுத்து வேட்டை ஆரம்பம்

**யாழ்ப்பாணம், மார்ச் 9**

**மக்கள் பேரவைக்கான இயக்கம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறு கோரிக்கையை முன்வைத்து நாடு பூராகவும் கையெழுத்து வேட்டையை ஆரம்பித்துள்ளது.**

கடந்த வியாழக்கிழமை மட்டக்களப்பு காத்தான்குடி மற்றும் ஆரயம்பதி பகுதிகளில் கையெழுத்துப் பெறும் நிகழ்வு நடைபெற்றது.

தற்போதைய ஆட்சியாளர்கள் ஆட்சிக்கு வரும்முன் தாம் ஆட்சிக்கு வந்தால் உடனடியாக பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படும் என வாக்குறுதி வழங்கியிருந்தனர் . ஆனால் ஆட்சிக்கு வந்து இவ்வளவு காலம் கடந்தும் பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படவில்லை.

அத்துடன் இந்த ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னரும் வழமையான கைதுகள் இந்தச் சட்டத்தின் மூலம் தொடர்ந்து நடைபெறுகின்றன என்று இதன்போது தெரிவிக்கப்பட்டது. (ச-125)

# சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு

இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபையின் யாழ். மாவட்ட தொழிற்பயிற்சி நிலையங்களில் தொழிற்கல்வியை முடித்த 600 இளைஞர். யுவதிகளுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு ராஜா கீறிம் கவுஸ் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் என். வேதநாயகன், சிறப்பு விருந்தினர்களாக இலங்கையின் தொழிற்பயிற்சி அதிகாரசபைத் தலைவர் விஜித வீரதுங்க, வடக்கு மாகாணத் தலைமைச் செயலாளர் எல். இளங்கோவன், யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் ம. பிரதீபன், வடக்கு மாகாண கல்வி அமைச்சகம், கலாசார விவகாரங்கள் விளையாட்டு இளைஞர் விவகாரங்கள் செயலாளருமான எம். பற்றிக் டிறஞ்சன். இலங்கையின் தொழிற்பயிற்சி அதிகாரசபை பொது இயக்குநர் மேஜர் ஜெனரல் பிரியந்த வீரசிங்க ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-41)



# தமிழர்களின் மரபுரிமைகள் கட்டிக்காக்கப்பட வேண்டும்

## துணைவேந்தர் சி. சிறிசற்குணராஜா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 9

பாரம்பரியம் அதுவே தமிழர்களின் வாழ்வியல். அந்தவகையில் தமிழ் மக்களின் மரபுரிமைகள் தொடர்ந்தும் பேணப்படவேண்டும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக்கற்கைகள் பீடம் நடத்திய மூன்றாவது சர்வதேச இந்து மாநாடு -2025 கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணத்துக்கென தனித்துவமான அடையாளங்கள் காணப்படுகின்றன. தற்போது யாழ்ப்பாணத்தைப் பார்த்துப் பலரும் அதிசயிக்கின்றனர். பாரம்பரியத்தின் உச்சம் யாழ்ப்பாணத்தில் தற்போதுவரை பேணப்பட்டு வருகிறது. தில்லையில் எவ்வாறு நீண்டகாலம் திருமுறைகள் பேணப்பட்டு வந்தனவோ அதேபோன்று தற்போது எங்கள் மண்ணில் இந்துக்கலைகளையும், தமிழையும், வாழ்வியல் சைவநெறியையும் பேணுவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடம் கிடைத்திருக்கிறது. 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட திருக்குறள் இதுவரை காலமும் பேணிப்பாதுகாக்கப்பட்டு தற்போதைய தலைமுறையும் படிக்கக் கிடைத்திருப்பது பெரிய மர்மம். இது இறைவனுடையதொரு ஏற்பாடு.

எமது வாழ்வில் கொண்டாட்டங்களை நாம் கொண்டாடுவது மிகவும் முக்கியம். அதற்குரிய அர்த்தங்கள் எங்கள் உள்ளக் கிடக்கைகளைத் திறக்கும்போது வந்துசேரும். எங்கள் சஞ்சலங்களைத் தீர்ப்பதற்காகவே எமது முன்னோர்கள் கலைகளை அமைத்தார்கள். எனவே எங்கள் மரபுரிமையைப் பேணுவதற்குச் சுயசிந்தனையுடன் நாங்கள் ஒவ்வொருவரும் செயற்படுவது அவசியமானது - என்றார். (ச-66)



# பொலிஸ் பரிசோதனை

கிளிநொச்சி, மார்ச் 9

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள எட்டுபொலிஸ் நிலையங்களின் வருடாந்த பொலிஸ் பரிசோதனை நிகழ்வு கிளிநொச்சி பிராந்தியத்துக்கான பொலிஸ் அத்தியட்சகர் சிசிர பெத்திர தந்திரி தலைமையில் கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இதன்போது பொலிஸாரின் உடை, பொலிஸ் பிரிவுகளின் செயற்பாடுகள் தொடர்பாக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டன. (ச-41-113)

# கலைஞர்கள் ஒன்றுகூடல்

வவுனியா, மார்ச் 9

வவுனியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கலைஞர்களின் ஒன்றுகூடல் நிகழ்வு வவுனியா பிரதேச செயலாளரும், கலாசாரப் பேரவையின் தலைவருமான இ. பிரதாபன் தலைமையில் வவுனியா நகரசபை திறந்தவெளி அரங்கில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது, பிரதேசக் கலைஞர்களின் பாடல்கள், கூத்துக்கள், இசைமுழக்கம், கவிதைகள், பட்டிமன்றம் போன்ற நிகழ்வுகளும் இடம்பெற்றதுடன் கலைஞர்களுக்கான அரசாங்க அடையாள அட்டையும் வழங்கிவைக்கப்பட்டது. (ச-41-110)




# ஊர்காவற்றுறையில் விவசாயிகள் அவதி

யாழ்ப்பாணம், மார்ச் 9

ஊர்காவற்றுறையில் உரவகைகள் மற்றும் கிருமிநாசினிகளைக் கொள்வனவு செய்ய விற்பனை நிலையங்கள் காணப்படாமையால் அசௌகரியங்களை எதிர்கொள்வதாக யாழ். மாவட்ட விவசாயக் குழுக்கூட்டத்தில் ஊர்காவற்றுறை விவசாயிகள் சுட்டிக்காட் டியுள்ளனர்.

இதுகுறித்து கலந்துரையாடிய அதிகாரிகள், குறித்த பொருள்களை விற்பனை செய்யக்கூடியவர்களைத் தொடர்புகொண்டு பதிவுகளை முன்னெடுக்குமாறு சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு அறிவுறுத்தல் வழங்கினர். (ச-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







இ.எம்.எஸ். விற்பனை ஊக்குவிப்பு;

# வவுனியா, யாழ்ப்பாணம் தபாலகங்களில் ஆரம்பம்

வவுனியா, மார்ச். 9

இலங்கை தபால் திணைக்களத்தின் நாடுதழுவிய இ.எம்.எஸ். விற்பனை ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு யாழ்ப்பாணம், வவுனியா தபால் திணைக்களங்களில் நேற்று இடம்பெற்றது.

இந்தச் செயற்பாட்டை மக்களுக்குத் தெளிவுபடுத்தும் முகமாக வவுனியா தபால் ஊழியர்களால் வவுனியா நகரப்பகுதியில் விழிப்புணர்வு பேரணி முன்னெடுக்கப்பட்டதுடன் துண்டுப்பிரசுரமும் வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் இந்த ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை கடற்றொழில் நீரியல்வளத்துறை அமைச்சர் இ.சந்திரசேகர் யாழ்.பிரதம தபாலகத்தில் ஆரம்பித்துவைத்தார்.

இந்தச் சேவையின் மூலம் பொருள்கள், ஆவணங்கள் தபால் போன்றவற்றை அரச பாதுகாப்புடன் விரைவாக வெளிநாடுகளுக்கு அனுப்பிவைக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ச-25,125,110)

அபிவிருத்திப்பணிகளின்போது

# பிற திணைக்களங்களின் கருத்தறிவது கட்டாயம்!

விவசாயக்குழுக்கூட்டத்தில் தீர்மானம்

**யாழ்ப்பாணம், மார்ச் 9**


**வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம் , உள்ளூராட்சி மன்றங்கள் விவசாயத்திணைக்களம் ,கமநல சேவைகள் திணைக்களம், நீர்பாசனத் திணைக்களத்துடன் கலந்துரையாடி ஆலோசனைகளைப் பெற்றே அபிவிருத்திப்பணிகளை முன்னெடுக்க வேண்டும் என்று மாவட்ட விவசாயக் குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

யாழ்.மாவட்டத்தில் வீதிகள் புனரமைப்புச் செய்யப்படும் போது முறையற்ற விதத்தில் வடிகால் வசதிகளின்றியும் நீரோட்டம் அறியாமலும் சீரமைக்கப்படுகின்றது. இதனால் விவசாய நிலங்களுக்குள் வெள்ளம் தேங்குவதால் விவசாய நிலங்கள் பாதிப்புக்குள்ளாக நேரிடுகின்றது என்று விவசாயிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த நீர்ப்பாசன யாழ்.மாவட்ட பொறியியலாளர், சாவகச்சேரி பகுதியில் சில அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இதுகுறித்து எம்முடனும் ॰ந்தவித கலந்துரையாடலும் மேற்கொள்ளப்படவில்லை. காலம் தாழ்ந்து அபிவிருத்திப் பணிகள் நிறைவடைந்த பின் எம்மிடம் ஆலோசனைக்கு வருகைதந்து பிரியோசனம் இல்லை- என்றார். அதற்குப் பதிலளிக்கும்போதே மாவட்டச் செயலர் , அபிவிருத்திப் பணிகளின் போது சம்பந்தப்பட்ட பிற திணைக்களங்களின் கருத்துகளையும் ஆலோசனைகளையும் பெற்ற பிற்பாடே அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கவேண்டும்- என்றார். (ச-125)

*சங்கானையில்*

# ஒலிபெருக்கிப் பாவனை; கட்டுப்படுத்த நடவடிக்கை



யாழ்ப்பாணம், மார்ச் 9

வலிகாமம் மேற்கு சங்கானைப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் ஒலிபெருக்கிப் பாவனையைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக ஆலய நிர்வாகத்தினர்களுடனான கலந்துரையாடல் பிரதேச செயலர் திருமதி கவிதா உதயகுமார் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது

இதில் திருவிழாக் காலங்களில் காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணிவரையும் 4 ஒலிபெருக்கிகள் மூலம் 100 மீற்றர் எல்லைக்குள் மட்டுமே பயன்படுத்தவேண்டும்.

சாதாரண நாள்களில் ஒலிபெருக்கிப் பெட்டி மூலம் ஆலய வளாகத்தினுள் மாத்திரம் குறைவான சத்தத்துடன் ஒலியெழுப்பப்படணேடும்.

பரீட்சை நடைபெறும் காலங்களில் ஒலிபெருக்கிப் பாவனையை முற்றாகத் தடைசெய்யவேண்டும்.

கடிகார எழுப்பொலி ஒலிக்கச்செய்யும்போது ஒலிபெருக்கியுடன் இணைக்காது ஆலய வளாகத்தினுள் மாத்திரமே ஒலிக்கச்செய்யவேண்டும்.

பிரதேச செயலகத்துக்கு அதீத ஒலிபெருக்கிப் பாவனை தொடர்பாக பொதுமக்களிடம் இருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றால் அதனை உறுதிப்படுத்திய பின் நடவடிக்கை எடுக்கப்படும் என்பன தீர்மானங்களாக நிறைவேற்றப்பட்டன. (ச- 125)

# கட்டாக்காலி மாடுகளால் தீவுப்பகுதிகளில் தொல்லை

யாழ்ப்பாணம், மார்ச் 9

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் தீவுப்பகுதிகளில் கட்டாக்காலி மாடுகளால் விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதாக விவசாயக் குழுக்கூட்டத்தில் விவசாயிகளால் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

வேலணை, நாராந்தனை ஆகிய பகுதிகளிலேயே கட்டாக்காலி மாடுகளின் தொல்லை அதிகமாகக் காணப்படுகின்றது. இதனால் தமது வாழ்வாதாரமான விவசாயம் பெரிதளவில் பாதிப்புக்குள்ளாகின்றது என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

இதுதொடர்பில் பிரதேச செயலர்கள் விசேட தீர்மானம் எடுத்து கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று யாழ்.மாவட்டச் செயலர் அறிவுறுத்தினார். (ச-125)



# யாழ்.மாவட்டத்தில் தொழிற்சந்தை நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச்.9

யாழ். மாவட்டச் செயலகமும் மனிதவள மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களமும் இணைந்து முன்னெடுத்த தொழிற்சந்தை நிகழ்வு நேற்று சனிக்கிழமை யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த யாழ். மாவட்ட மேலதிக செயலாளர் ஸ்ரீமோகன்,யாழ். மாவட்டத்தில் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்து, தத்தமது கல்வித் தகுதிக்கேற்ப தொழில் தேடிக்கொண்டிருக்கும் இளைஞர் யுவதிகளுக்கும் இந்தத் தொழிற்சந்தை களமாக அமையவேண்டும் என தெரிவித்தார். (ச-41-27)

# மூளாயில் கத்திவெட்டு; இளைஞனுக்கு காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 9

யாழ்ப்பாணம் மூளாயில் கத்திவெட்டுக்கு இலக்காகி காயமடைந்த நிலையில் 22 வயதுடைய இளைஞர் ஒருவர் யாழ்.போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடந்துள்ளது. இளைஞர்கள் இருவரிடையே ஏற்பட்ட முரண்பாட்டில் அதில் ஒருவர் கத்தியால் மற்றையவரை வெட்டிவிட்டு தப்பிச்சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தப்பிச்சென்ற இளைஞரை கைதுசெய்வதற்கு மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களின் திறமைக்கேற்ப தேர்தலில் களம் அமையுங்கள்

### கபே அமைப்பு வலியுறுத்து

**யாழ்ப்பாணம், மார்ச் 9**

**நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் வேட்புமனுவில் உள்ள வெற்றிடங்களை நிரப்புதல் என்ற போர்வையில் பெண்வேட்பாளர்களை உள்ளீர்க்காது பெண்களின் திறமைக்கும் அவர்களது சேவைக்கும் உரிய அங்கீகாரத்தை வழங்குவதை அரசியல் கட்சிகள் உறுதிசெய்யவேண்டும் என்று கபே அமைப்பு வலியுறுத்தியுள்ளது.**

பெண்களுக்கான டிஜிற்றல் மற்றும் ஊடகப் பாதுகாப்பை மையப்படுத்திய 3 நாள் பயிற்சிப்பட்டறை நிகழ்வு யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதியொன்றில் நேற்று ஆரம்பமானது.

இதில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே கபே அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளர் மானஷ மகீன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடளாவிய ரீதியில் அரசியல் பிரவேசத்தை முன்னெடுக்கவுள்ள அல்லது அரசியல் நீரோட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்ற பெண்கள் நவீன உலகின் தேவைக்கேற்ப ஆற்றலுள்ளவர்களாக பரிணமிக்க வேண்டியது அவசியம்.

அதற்காக அவர்கள் தங்களை இன்றைய நவீன தொழில்நுட்பம் மற்றும் சமூக ஊடகங்களின் பக்கமும் ஈடுபடுத்திக்கொள்வது அவசியமாகும்.

இம்முறை நடைபெறவுள்ள உள்ளூர் அதிகாரசபைத் தேர்தலில் வேட்புமனுவில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக என்ற போர்வையில் பெண் வேட்பாளர்களை உள்ளீர்க்கக்கூடாது. பெண்களின் பங்களிப்பை தேவைக்கானதாக எடுத்துக்கொள்ளாது அவர்களது திறமைகளினதும் மக்கள் மத்தியில் அவர்கள் ஆற்றிய சேவைகளினதும் அடிப்படையில் முன்னிறுத்த வேண்டும்.

அத்துடன் பெண்களின் பாதுகாப்பான ஊடக பங்கேற்பு, சமூக விழிப்புணர்வை அதிகரிப்பதற்கு அரசியல் கட்சிகளும் துறைசார் அமைச்சு மட்டுமல்லாது ஊடகங்களும் இணைந்து செயற்படவேண்டும்- என்றார். (ச-125-27,66)




# உரிமையோடு பயணிப்பதற்கு தமிழருக்கு வாய்ப்பளிக்குக

### பெரமுனக் கட்சியின் கிளிநொச்சி அமைப்பாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி, மார்ச் 9

அரசாங்கத்திடம் பேரம் பேசும் சக்திகளாக இருப்பதைக் காட்டிலும் உரிமையோடு சேர்ந்து பயணிக்கக்கூடியவர்களாக தமிழ் மக்கள் மாற வேண்டும் என்று பொதுஜன பெரமுன கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் மதனவாசன் தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுன கட்சியின் கிளிநொச்சி மாவட்ட பிரதம அமைப்பாளராக நியமிக்கப்பட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன 2015ஆம் ஆண்டு அடைந்த தோல்விக்கு பின்னர் துவண்டுவிடவில்லை மீண்டும் 2019 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றங்களினூடாக, எழுச்சிபெற்றது. இப்பொழுது எமக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. சமகால அரசாங்கத்தின் வாக்குறுதிகள் மற்றும் செயற்பாடுகளில் அதிருப்தியடைந்துள்ள மக்கள் பொதுஜன பெரமுன கட்சியின் செயற்பாடுகளை ஏற்றுக்கொள்ளும் சூழல் வெகுவிரைவில் வரும்- என்றும் அவர் தெரிவித்தார். (ச-22,125)

# பாடசாலை மலசலகூடம் அமைக்க உதவிகோரல்

யாழ்ப்பாணம், மார்ச் 9

யாழ்ப்பாணம் அச்சுவேலி மத்திய கல்லூரியின் ஆண் மாணவர்களின் மலசலகூடம் முற்றாகப் பழுதடைந்து பாவிக்கமுடியாத நிலையில் காணப்படுகின்றது.

இதனால் மாணவர்கள் பெரும் நெருக்கடியைச் சந்தித்துவருகின்றனர்.

அதனைச் சீரமைப்பதற்கு சுமார் இரண்டு மில்லியன் ரூபா தேவையாகவுள்ளது.

இதற்கான பங்களிப்பைப் பழைய மாணவர்கள்,நலன் விரும்பிகள் மற்றும் பாடசாலைச் சமூகத்திடமிருந்து எதிர்பார்ப்பதாகப் பாடசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.

உதவ விரும்புவோர் 0779220302, 0212058323 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறும் பாடசாலை நிர்வாகம் கேட்டுள்ளது. (ச-66)

# வடக்குக் கிழக்கை இணைக்கும் கொக்கிளாய் பாலத்தைச் சீரமைக்குக

### ரவிகரன் எம்.பி. கோரிக்கை

முல்லைத்தீவு, மார்ச். 9

வடக்கு மாகாணத்தின் முல்லைத்தீவையும் கிழக்கு மாகாணத்தின் திருகோணமலையையும் இணைக்கும் கொக்கிளாய் பாலத்தை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சர் விமல் ரத்நாயக்கவிடம் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தப் பாலத்தின் சீரமைப்பினூடாக அதிகமான சுற்றுலாப்பயணிகளை உள்ளீர்க்கமுடியும்.

இந்தப்பாலத்தை கொக்கிளாய் நீரேரியினூடாக அமைப்பதனால் மிகவும் குறுகிய நேரத்தில் பயணிகள் பிரயாணம் செய்வதற்கு உதவும்.

எனவே நாட்டை முன்னேற்றும் வகையிலான இந்தப் பாலத்தை சீரமைக்கும் திட்டத்துக்கு அடுத்த வரவு- செலவுத்திட்டத்திலோ அல்லது அதற்குமுன் பொருத்தமாக நிதி கிடைக்கும் பட்சத்திலோ முன்னுரிமை தாருங்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-26)




# அரசியல் பன்மைத்துவம் வவுனியாவில் கலந்துரையாடல்

வவுனியா , மார்ச். 9

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தில் ஏற்பாட்டில் தேர்தல் செயன்முறையில் பெண்கள், இளையோர் மற்றும் குறைந்தளவு பிரதிநிதித்துவம் பற்றி ஆராயும் கலந்துரையாடல் வவுனியா இரண்டாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இதில் அரசியல் பன்மைத்துவம், தேர்தல் செயன்முறைகளில் பிரஜைகளின் அல்லது குடிமக்களின் ஈடுபாடு மற்றும் தகவல்களின் தாக்கம் தொடர்பில் இதில் கலந்துரையாடப்பட்டது. (ச-22,18)

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச்.9

வடக்கு மாகாணத்தில் இந்த வருடம் சிறுபோகச்செய்கையில் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி விவசாய உற்பத்தியை அதிகரிப்பது தொடர்பான கலந்துரையாடல் வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகம் தலைமையில் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. குறித்த கலந்துரையாடலில் வடமாகாண பிரதம செயலாளர், வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர், வடமாகாண நீர்ப்பாசன மற்றும் விவசாயப்பணிப்பாளர்கள், ஐந்து மாவட்டங்களின் விவசாயப்பணிப்பாளர்கள், நீர்ப்பாசனப் பொறியியலாளர்கள், விவசாயத்திணைக்கள உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (ச-41-113)

# யாழ்.போதனா மருத்துவமனையில் நோயாளர் நட்புறவாளர் சேவை

யாழ்ப்பாணம், மார்ச் 9

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மன்றத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நோயாளர் நட்புறவாளர் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையை நாடும் நோயாளிகளின் அடிப்படைத் தேவைகளை இலகுபடுத்தி நோயாளரின் சுகாதார நலன் பெறுதலை வினைத்திறனாக்கும் வகையில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

மருத்துவம், உளவள ஆலோசனை சார்ந்த துறையில் கற்கையை (NVQ3 Level) பூர்த்தி செய்தவர்கள் அல்லது அதேதுறையில் குறைந்தது மூன்று வருட அனுபவத்துடன் சமூக சேவைப் பின்னணி உள்ளவர்கள் குறித்த திட்டத்துக்கு விண்ணப்பிக்கமுடியும். தேர்வுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். முதல் இரண்டு வாரங்கள் பணிசார்ந்த பயிற்சிகள் வழங்கப்படும். பொருத்தமான ஊதியம் வழங்கப்படும். விண்ணப்பிக்க விரும்புபவர்கள் சுயவிபரக்கோவையை இல 69, புங்கன்குளம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எதிர்வரும்15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறும், மேலதிக விவரங்களுக்கு 0770024334 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவக்கலாநிதி த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார். (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். பிள்ளைகள் வழியில் வீண்செலவுகள் ஏற்படக்கூடும். வெளியிடங்களில் சாப்பிடுவதைத் தவிர்ப்பது நல்லது. தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். பணிச்சுமை அதிகரிக்கும்.

**இடபம்:** சற்றுச் சோர்வாக இருக்கும். பிற்பகலுக்கு மேல் உற்சாகமும் மகிழ்ச்சியும் ஏற்படும். உறவுகளால் ஆதாயம் உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. பணியாளர்களின் ஒத்துழைப்பால் கூடுதல் இலாபம் கிடைக்கும்.

**மிதுனம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். முக்கிய முடிவுகளை எடுப்பதற்கு உகந்தநாள். அலுவலகத்தில் கூடுதல் பொறுப்பு வந்துசேரும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் சுமாராக இருக்கும்.

**கடகம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். திடீர்ச்செலவுகள் மனதைச் சஞ்சலப்படுத்தும். முக்கிய முடிவுகளை ஒரு முறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. பணிச்சுமை அதிகரிக்கும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாக முடியும். தாய்வழி உறவுகளுக்காக செலவுசெய்யவேண்டிவரும். அலுவலகத்தில் பணி நெருக்கடி குறையும். வியாபாரத்தில் சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டிவரும்.

**கன்னி:** எதிர்பாராத செலவுகள் ஏற்படும். ஆனால், போதுமான பணம் இருப்பதால் கடன்வாங்க வேண்டிய அவசியம் ஏற்படாது. மாலையில் வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். பணிச்சுமை இருந்தாலும் சமாளித்துவிடுவீர்கள்.

**துலாம்:** அதிர்ஷ்டகரமான நாள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. இன்று நீங்கள் எடுக்கும் புதிய முயற்சி வெற்றிகரமாக முடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணை ஆதரவாக இருப்பார்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தந்தையின் தேவையை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். நன்மை ஏற்படும்.

**தனுசு:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகையால் வீட்டில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். வியாபாரத்தில் விற்பனை வழக்கம் போலவே காணப்படும்.

**மகரம்:** எதிலும் சற்று பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும் அனுசரித்துச் செல்லவும்.

**கும்பம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**மீனம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்துகொடுப்பீர். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.



# கிளிநொச்சி மாவட்டத்தில் சர்வதேச மகளிர் தினம்



கிளிநொச்சி, மார்ச். 9

சுதந்திரப் பறவைகள் மகளிர் பேரவை நடத்திய சர்வதேச மகளிர்தினநிகழ்வு கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் பேரவையின் தலைவி திருமதி முராளினி தினேஸ் தலைமையில் நேற்று இடம்பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவருமான சி.வீ.கே. சிவஞானம் ஆகியோர்கள் பங்கேற்றனர். (ச-113)

## சுவாமி ஞானப்பிரகாசர் முப்பொன்விழா

யாழ்ப்பாணம், மார்ச். 9

யாழ். மறைமாவட்டம், யாழ். தமிழ்ச்சங்கம், யாழ். அமலமரித்தியாகிகள் மாகாணம் ஆகிய அமைப்புகளின் இணை ஏற்பாட்டில், நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அடிகளாரின் பிறப்பின் முப்பொன்விழா இந்த ஆண்டு முன்னெடுக்கப்படவுள்ளது.

ஆரம்ப நிகழ்வானது நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் வளர்ந்த ஊராகிய அச்சுவேலியில் எதிர்வரும் 13 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அச்சுவேலிப் பேருந்து நிலையத்திலிருந்து கலாசாரப் பவனி ஆரம்பிக்கப்பட்டு புனித திரேசாள் பாடசாலையில் அரங்க நிகழ்வுகளுடன் நிறைவடையும்.

அத்துடன் பாடசாலை மட்டத்தில் கட்டுரை, பேச்சு போன்ற போட்டிகள் நடத்தப்படவுள்ளன. ஆய்வரங்கம், மலர் வெளியீடு மற்றும் ஆய்வு நூலுக்கான ஆய்வுக் கட்டுரைகளை தனி நூலாகவும் ஏனைய ஆக்கங்களை இன்னுமொரு மலராகவும் வெளியிடப்படவுள்ளது.

ஆய்வுநூல் வெளியீட்டுக்கு யாழ். பல்கலைக் கழகப் பட்டப் பின்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் தி வேல்நம்பியின் வழிகாட்டலுக்கு அமைய நல்லூர் சுவாமி ஞானபிரகாசரின் சமயப்பணி, வரலாற்றுப்பணி, சமூகப்பணி, மொழிப்பணி போன்றவை உள்ளடக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் பெற்றுக்கொள்ளப்படவுள்ளன.

எதிர்வரும் ஜூன், ஜூலை மாதங்களில் பாடசாலைப் போட்டிகளுயும், ஓகஸ்ட் அல்லது ஒக்ரோபர் மாதத்தில் ஆய்வரங்குயும், செப்ரெம்பர் மாதமளவில் நிறைவுவிழாவும் இடம்பெறவுள்ளது. (ச-25)

## யாழ். நூலக அபிவிருத்தி ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச். 9

யாழ்.பொது நூலகத்தின் அபிவிருத்தி ஆலோசனைக் கூட்டம், பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)

## செயற்பட்டு மகிழ்வோம்

யாழ்ப்பாணம், மார்ச் 9

யாழ்.ஸ்கந்தவரோதய ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டுப்போட்டி நிகழ்வு அதிபர் சிவசுப்பிரமணியம் நேதாஜி தலைமையில் பாடசாலை மைதானத்தில் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபர் என்.நந்தீஸ்வரன், சிறப்பு விருந்தினராக யாழ்.சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் எம்.செல்வஸ்தான் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-22,66)

★★★★

யாழ்ப்பாணம், மார்ச் 9

மட்டுவில் கண்ணகை முன்பள்ளிச் சிறார்களின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு, முன்பள்ளி மைதானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெறும்.

கண்ணகை சனசமூக நிலையத் தலைவர் நா.ஹஜேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில், முதன்மை விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சரோஜினிதேவி அரியநாயகம் கலந்துகொள்வார். (ச-25,9)

## சதுரங்கச் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், மார்ச். 9

இணுவில் பொதுநூலக சனசமூக நிலையத்தின் ஆண்டு விழாவை முன்னிட்டு, லம்போதரா விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில், சதுரங்கச் சுற்றுப் போட்டி இணுவில் பொதுநூலகத்தில் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

7 வயது முதல் 17 வயது வரையான மாணவர்களுக்கு வயதுப்பிரிவுகளின் அடிப்படையில் போட்டிகள் நடைபெறவுள்ளன.

போட்டிக்கான விண்ணப்பப்படிவங்களை நூலகத்தில் பெற்று, அல்லது மென்பிரதியை அச்சிட்டு நிரப்பி எதிர்வரும் 12 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் அலுவலகத்தில் சமர்பிக்கவேண்டும்.

மேலதிக தகவல்களுக்கு 0212241930 , 0770737919 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

மனிதனை மனிதனாக்குபவை உதவிகளும் வசதிகளுமல்ல. இடையூறுகளும் துன்பங்களுமே.

—மாத்யூஸ்—

# கிரிக்கெட் என்பது 'பொதுமொழி'!

யாழ்ப்பாணத்தில் கடந்த மூன்று நாள்களாக கிரிக்கெட் திருவிழா களைகட்டியிருக்கின்றது. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான வடக்கின் போர், யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான பொன் அணிகளின் போர் என்பன கோலாகலமும் கொண்டாட்டமுமாக நடந்தேறியிருக்கின்றன. இவற்றை விடவும், வீரர்களின் போர், நண்பர்களின் போர், வன்னியின் போர் என பாடசாலைகளுக்கு இடையிலான 'கிரிக்கெட் பருவகாலம்' இனிதே ஆரம்பித்திருக்கின்றது.

பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுக் கட்டமைப்பை தளம்பலற்ற வகையில் பேணுவதற்கும், சுயபரீசிலனைகளில் ஈடுபடுவதற்கும், மேம்படுத்துவதற்கும் இந்தப் 'போர்கள்' அவசியமானவையாகவும் தவிர்க்க முடியாதவையாகவும் இருக்கின்றன. அதை மறுப்பதற்கில்லை. ஆனால், இந்தக் கிரிக்கெட் ஆட்டங்கள் பாடசாலைகளின் ஆண்கள் அணிகளுக்கு மட்டுமானவையா? பெண்கள் அணிகள் எப்போதுதான் இந்தக் கிரிக்கெட் போர்களில் ஈடுபடப்போகின்றன? என்ற கேள்விக்குரிய பதிலைத் தேடவேண்டிய கட்டாயத்தில் வடக்குப் பாடசாலைகளும் - உள்ளகக் கிரிக்கெட் கட்டமைப்பும் இருக்கின்றன.

கிரிக்கெட் ஆட்டங்கள் ஆண்களுக்கு உரித்தானவை என்ற எண்ணப்பாடு இருந்தகாலம் என்றோ இறந்து புதைந்துவிட்டது. இன்று 'கிரிக்கெட்' என்பது பால் நிலைகள்கடந்த ஒரு பொதுமொழி. அவுஸ்திரேலியாவுக்கு பெர்ரி, இங்கிலாந்துக்கு ரெய்லர், இந்தியாவுக்கு மந்தானா, இலங்கைக்கு சாமரி அத்தப்பத்து என்று பெயர் சொல்லி வீராங்கனைகளை அடையாளப்படுத்தும் காலமிது. அந்தளவுக்கு உலகம் இன்று பெண்கள் கிரிக்கெட்டை ஏற்றுக்கொண்டதுடன் அதை இரசிக்கவும் தலைப்பட்டுள்ளது. ஆனால், வடமாகாண பெண்கள் கிரிக்கெட் கட்டமைப்பும் - பாடசாலைப் பெண்கள் கிரிக்கெட் அணிகளும் இன்னமும் மேம்படுத்தப்பட்டபாடில்லை. மிகவும் மந்தமான வினைத்திறனுடன் ஒரே வட்டத்தைச் சுற்றிச்சுற்றிதான் இந்தச் செயற்பாடுகள் வலம்வந்தபடி இருக்கின்றன.

இந்த மாற்றத்துக்கான புதிய தேடலாகவும் பெரும் பாய்ச்சலாகவும் பாடசாலை பெண்கள் அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போர்கள் நடத்தப்பட வேண்டும். ஆண்கள் அணிகளுக்கு இடையிலான மோதல்கள் 'வடக்கின் போர்', 'பொன் அணிகளின் போர்' என்று பெயர்சொல்லி அடையாளப்படுத்தப்படுவதைப் போன்று பெண்கள் அணிகளுக்கு இடையிலான மோதல்களும் பெயர்சொல்லி அடையாளப்படுத்தப்பட வேண்டும். இந்த மாற்றம் இலங்கைக்கே ஒரு முன்னுதாரண மாற்றமாக நிச்சயம் இருக்கும். வடக்கில் நூற்றாண்டுகாலப் பழமையையும் பாரம்பரியத்தையும் கொண்ட எத்தனையோ பெண்கள் பாடசாலைகள் உள்ளன. உடுவில் மகளிர் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி என்று இந்தப் பட்டியல் நீண்டு செல்லும். இந்தப் பாடசாலைகள் இந்தப் புதிய வரலாற்றுக்கான தொடக்கத்தை சாதகமாகப் பரிசீலிக்க வேண்டும்.

ஆண்களைப் போன்று பெண்களால் (பாடசாலை மாணவிகளால்) இரண்டு நாள்கள் தொடர்ச்சியாக வெயிலுக்குள் நின்று விளையாட முடியுமா? என்ற கேள்வி எழலாம். ஒப்பீட்டளவில் ஆண்களை விடவும் பெண்கள் உடல்வலு குறைந்தவர்கள்தான். ஆனால், அதை சரிசெய்யக்கூடிய மாற்றுத் திட்டங்களை கைக்கொள்ளலாம். ஆண்கள் கிரிக்கெட்டில் ஒரு நாளில் 90 பந்துப்பரிமாற்றங்கள் வீசப்படுகின்றன. இதை பெண்கள் கிரிக்கெட்டில் 75 பந்துப்பரிமாற்றங்களாகக் குறைக்கலாம். அல்லது இரண்டு நாள்களாக அல்லாமல் ஒன்றரை நாள்கள் கொண்டதாக ஆட்டத்தை மாற்றியமைக்கலாம். பெண்களுக்கு இடையிலான கிரிக்கெட் 'போரை' நடத்துவது என்று முடிவெடுத்துவிட்டால் அதைச்சாதகமாகப் பரிசீலிக்க ஆயிரம் வழிகள் உள்ளன.





# ஐ.தே.க.விலிருந்தே அடுத்த ஜனாதிபதி

வஜிர அபேவர்தன தெரிவித்தார்

**கொழும்பு, மார்ச் 9**

**ஸ்ரீலங்காவின் 10ஆவது நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்தே தெரிவு செய்யப்படுவார் என்று ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ஐக்கிய மக்கள் சக்தியுடன் ஒன்றிணையாவிட்டாலும் பத்தாவது நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஐக்கிய தேசிய கட்சியிலிருந்தே தெரிவு செய்யப்படுவார். அது ஜனநாயக ரீதியியாகவோ அரசியலமைப்பு ரீதியாகவோ அல்லது பொருளாதார நெருக்கடியின் மூலமாகவோ இடம் பெறலாம். இந்த ஆண்டிறுதியில் நாட்டில் மீண்டும் கடும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடும்.

கடந்த ஆண்டு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் பெண்கள் தொடர்பான பிரகடனம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அது மாத்திரமின்றி நாட்டுக்கு தேவையான பல்வேறு சட்டங்கள் அவரால் முன்வைக்கப்பட்டன. பொருளாதார அபிவிருத்தி சட்டம், ஊழல் எதிர்ப்பு சட்டம், கடனை எவ்வாறு மீள செலுத்துவது என்பதற்கான தேசிய கொள்கை சட்டம் என்பன அவற்றில் குறிப்பிடத்தக்கவையாகும் - என்றார். (ம)

## பாடசாலை சேவை பஸ்கள் அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 9
பாடசாலை மாணவர்களின் பொதுப்போக்குவரத்து வசதிகளைக் கருத்திற்கொண்டு 'சிசுசரிய' திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு 2 ஆயிரம் பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.
அதற்கமைய பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள பாடசாலைகள் தொடர்பான விவரங்களைக் கல்வி அமைச்சர் சமர்ப்பிக்கவேண்டுமென சபை முதல்வரும், போக்குவரத்து அமைச்சருமான பிமல் ரத்நாயக்க நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். (ச-இ)



## கடனட்டை பயன்பாடு நாட்டில் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 9
நாட்டில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் புதிய கடன் அட்டைகளும் கடன் அட்டை பயன்பாடுகளும் அதிகரித்துள்ளதாக தரவுகள் தெரிவித்துள்ளன. கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 1,951,654 ஆக இருந்த கடன் அட்டைகளின் எண்ணிக்கை டிசெம்பர் மாதம் 1,970,130 ஆக அதிகரித்துள்ளது.
அத்துடன் 2024 ஆம் ஆண்டும் நவம்பர் மாதம் கடன் அட்டை பயன்பாடுகளால் கிடைக்கப்பெற்ற நிலுவைத் தொகை 151,614 மில்லியன் ரூபாவாக காணப்பட்ட நிலையில், டிசெம்பர் மாதமளவில் 157,957 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

## குறைபாடுள்ள குழந்தைகள் பிறப்பு எண்ணிக்கை உயர்வு

கொழும்பு, மார்ச் 9
இலங்கையில் ஆண்டுதோறும் 4000-5000 வரையான குழந்தைகள் பிறக்கும்போதே குறைபாடுகளுடன் பிறப்பதாகச் சமுதாய மருத்துவ நிபுணர் கபில ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.
பிறப்புக் குறைபாடு தினத்தை முன்னிட்டு மருத்துவசங்கங்களின் தலைமையகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். பிறக்கும் குழந்தைகளுக்குச் சமிபாட்டுப் பிரச்சினை, சிறுநீரகம், எலும்புகள், சதைகள், பிறப்புறுப்புகள் தொடர்பான பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இது தொடர்பான விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகள் நாடாளாவியரீதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-6)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

முல்லைத்தீவின்

# பெண் சாதனையாளர்களுக்கு 'அரியாத்தை' விருது

**முல்லைத்தீவு, மார்ச். 9**

**முல்லைத்தீவு, குமுளமுனைக் கிராமத்தின் வீரப்பெண்மணியாகத் திகழ்ந்த 'ஆனைகட்டிய அரியாத்தை'யின் ஞாபகார்த்தமாக முல்லைத் தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பல்துறைப் பெண் சாதனையாளர்களுக்கு 'அரியாத்தை' விருது இந்த ஆண்டு முதற்தடவையாக வழங்கப்பட வுள்ளது.**

சர்வதேச மகளிர் தினத்தை முன் னிட்டு, முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் இந்த விருதுவழங்கும் நிகழ்வு, மாவட் டச் செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் இம்மாத இறுதியில் நடைபெறவுள்ளது.

அதற்கமைய 'பெண் வாழ்நாள் சாதனையாளர்' விருது 70 வயது கடந்தும் தடகளப் போட்டிக ளில் சர்வதேச ரீதியில் விளை யாட்டில் சாதனை படைத்து நாட் டுக்கும் முல்லைத்தீவு மாவட்டத் துக்கும் பெருமை சேர்த்த முல் லைத்தீவு அகிலத்திருநாயகிக் கும், சிறந்த பெண் தலைமைத் துவ விருது இலங்கையின் முதல் தமிழ்பேசும் பரீட்சை ஆணையா ளராக பதவி உயர்வு பெற்ற முல் லைத்தீவு மாவட் டம் புதுக்குடியி ருப்பைச் சேர்ந்த திருமதி மைக் கல் திலகராஜா ஜீவராணி புனிதா வுக்கும், ஆண்டின் சிறந்த பெண் தொழில்முனைவோர் விருது ஆடை வடிவமைப்புத்துறையில் சிறந்த முன்மாதிரியான தொழில் முனைபவராகவும் சமூக சேவை களில் ஈடுபட்டுவருபவருமான மாற்றுத்திறனாளியான துணுக் காய் உயிலங்குளத்தைச் சேர்ந்த திருமதி சத்தியானந்தம் சோபனா வுக்கும், ஆண்டின் சிறந்த பெண் சமூக சேவகர் விருது மாந்தை கிழக்கு மத்தியஸ்தர் சபையில் பெண் தவிசாளராக. சமாதான நீதிவானாக, குடிசார் அமைப்பின் முல்லைத்தீவு மாவட்ட நிர்வாக உறுப்பினராக. சிகரம் கல்வி நிலையத்தின் பதிவாளராகச் செயற்படும் மாந்தை கிழக்கு பாண்டியன்குளம், நட்டாங்கண் டலைச், சேர்ந்த திருமதி விக் னேஸ்வ ரன் ஜெகதாம்பிகைக் கும், ஆண்டின் சிறந்த பெண் மாற்றத்தை ஏற்படுத்துபவர் விருது ஆண்களுக்கு பெண்கள் சளைத்தவர்கள் அல்லர் என்ப தனை தனது வெல்டிங் தொழில் முயற்சியின்மூலம்நிரூபித்துள்ள வெலிஓயா ஜனகபுரவைச் சேர்ந்த திருமதி வலிசிகே கொண் டச்சரிலாகே ஷிராணி விமலசே னவுக்கும் , ஆண்டின் சிறந்த இளம்பெண் தொழில்முனை வோர் விருது பல்கலைகழகக் கல்வியின் அறிமுகத்துடன் தொழிலுக்கு ஏற்ற வகையில் களிமண் ஆபரண முறையினை சுயமாகத் தேடி கற்றுக்கொண்டு இலங்கையில் களிமண் ஆபர ணங்களின் விற்பனையை விரி வுபடுத்தி வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்தலில் ஈடுபடுவது டன் பெண்களுக்கு தொழில் வாய்ப்பளித்தலில் முன்னுரிமை யளிக்கும் ஒட்டுசுட்டான் முத்துவி நா யகபுரத்தைச் சேர்ந்த திருமதி கிருசாந் நிதுசாவுக்கும் வழங்கப் படவுள்ளது. (ச-25, 125)



## ஏழிசை மாலை

சாவகச்சேரி, மார்ச்.9

தென்மராட்சிக் கல்வி வலய அழகியல் பாடப்பிரிவின் ஏழிசை மாலை-32 வல யப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் மு. ஜெக தாசன் தலைமையில் சாவகச்சேரி நகர சபையின் பொன்விழா மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக இசைத்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி. திருமதி சுகன்யா அரவிந்தன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய சங்கீத ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் திருமதி புனிதகுமாரி ஈழநே சன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-41-9)



## கருத்தரங்கு!

யாழ்ப்பாணம், மார்ச். 9

க.பொ.த.சாதாரண தரம் 2024 மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட் டல் கருத்தரங்கு பருத்தித்துறையில் அண்மையில் இடம்பெற்றது. வேலும் மயிலும் பவுண்டேஷன் மற்றும் களனி பல்கலைக்கழகத் தமிழ் மாண வர் ஒன்றியம் ஆகியவற்றின் ஏற்பாட் டில் இந்த வழிகாட்டல் கருத்தரங்கு நடத்தப்பட்டது. (ச-22,100)

**தேவை**

பொதி செய்தல், கூலியாட்கள், மில் வேலை தெரிந்தவர்கள், மில் உபகரணங்கள் (நெல், தானியங்கள்)

0777722215

**பணிப்பெண் தேவை**

வீட்டு வேலைக்கு பணிப்பெண் தேவை.

0776510696, 0779025722

MK Visa World

**வேலை வாய்ப்பு விசா**

இத்தாலி Work Permit யப்பான் Work Permit, டுபாய், மலேசியா வேலை விசா சகல நாடுகளுக்குமான Visit Visa மத்திய கிழக்கிற்கான ஆண், பெண் வேலை வாய்ப்பு

தொடர்பு: **074 035 2940**

## 31ம் நாள் நினைவு அஞ்சலி



தோற்றம் 04 . 07 . 1935


உதிர்வு 07 . 02 . 2025

**அமரர் தம்பித்துரை கனகசபை**

நெட்டிலைப்பாய் பிள்ளையார் ஆலயத்தின் முன்னாள் பரிபாலனசபை செயலாளர் அமரர் தம்பித்துரை கனகசபை அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல நெட்டிலைப்பாய் விநாயகரை வேண்டுகின்றோம்.

நெட்டிலைப்பாய் பிள்ளையார்
ஆலய பரிபாலன சபையினர்

## மரண அறிவித்தல்



தோற்றம் 25 . 10 . 1951

மறைவு 07 . 03 . 2025

**அழகரட்ணம் சாள்ஸ் மனோகரன்**

உரும்பிராய் தெற்கு, உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் கிழக்கு 35 Trafalgar st, Lowestoft NR32 2AT UK ஐ வசிப்பிடமாகவும் கொண்ட அழகரட்ணம் சாள்ஸ் மனோகரன் அவர்கள் நேற்றுமுன்தினம் (07.03.2025) வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அழகரட்ணம் - தயாமணி தம்பதியின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான நல்லையா - மகேஸ்வரி தம்பதியின் அன்பு மருமகனும், குமரேஸ்வரி அவர்களின் பாசமிகு கணவரும், மாலதி (ஓய்வுபெற்ற ஆசிரியர் உரும்பிராய்/சைவத் தமிழ் வித்தியாலயம்), பிரபாகரன் (ஓய்வுபெற்ற ஆசிரியர் யா/சென்ஜோன்ஸ் கல்லூரி), சரளா (ஜேர்மனி), சாந்திகரன் (UK) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் தருமபாலன் ராஜேஸ்வரி (அத்தை), விஜயகுமாரன் (Canada), விஜயராசன் (UK) ஆகியோரின் மைத்துனர் , நிறோஜி (UK), நிலோஜி (UK) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிசாந்தன் (UK), பகிரதன் (UK) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஜெனுஸ் (UK), ஜெனுஸ்கா (UK), திவிஸ் (UK) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல் : குடும்பத்தினர்**

உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்

மகள் - 0044 740 231 5096
சகோதரன் - 077 778 9735
சகோதரி - 077 869 1540

(CS/2692) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கறுவா மரக்கன்றுகள் வழங்கிவைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 9

தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக எல்லைக்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக வருமானம் ஈட்டக்கூடிய வகையில் கறுவா மரக்கன்றுகள் நேற்று வழங்கிவைக்கப்பட்டன.

தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் க.கமலராஜன் தலைமையில் வரணி மத்திய கல்லூரியில் வைத்து முதற்கட்டமாக 780 கறுவா மரக்கன்றுகள் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கிவைக்கப்பட்டன. (சு-28)












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.பல்கலைக்கழக தென்மராட்சி மாணவ ஒன்றியத்தின் ஏற்பாட்டில், கா.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான செயலமர்வு, யாழ்.கச்சாய் மகாவித்தியாலயத்தில் கடந்த மாதம் 23 ஆம் திகதி மற்றும் மார்ச் 1 ஆம் திகதிகளில் நடைபெற்றது. (ச-25)



பொருளாதாரரீதியாகப் பின்தங்கியுள்ள கிராமப்புறப் பாடசாலை மாணவர்கள் எழுதுகருவி பெறுவதற்காக அரசாங்கத்தால் வழங்கப்படும் 6 ஆயிரம் ரூபா வவுச்சர்கள் கிளிநொச்சி மாவட்டத்தின் வடக்கு மற்றும் தெற்கு வலயப் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்டுவருகின்றன. (ச-41-113)



# சிகிச்சை முகாம்

யாழ்ப்பாணம் மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வழிபாட்டு மன்ற ஏற்பாட்டில் கண், காது சிகிச்சை முகாம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கல்வியங்காடு மன்றத்தில் நடத்தப்பட்டது. இதன்போது 225 பேருக்கு கண்ணாடி வழங்கவும், 25 பேருக்கு கண்புரை சத்திரசிகிச்சை வழங்கவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. (ச-41-159)



யாழ்.மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும், ஆங்கில மொழிதின நிகழ்வும் பாடசாலை முதல்வர் சுதாமதி தயாபரன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றன. (ச-22,20)



யாழ். சென் சாள்ஸ் மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி பாடசாலை அதிபர் ஜி.லெனின்குமார் தலைமையில் பாடசாலை மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. (ச22,20)



மினி சூறாவளி காரணமாகப் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஜே/68 மற்றும் ஜே/69 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கு வீடு திருத்தத்திற்கான காசோலைகளைப் பிரதேச செயலாளர் சாம்பசிவம் சுதர்சன் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கிவைத்தார். (ச-41-159)



# சந்நிதியான் ஆச்சிரமத்தால் மலையகத்தில் உதவிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 9

சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தினரால் மலையகத்தில் இரு பாடசாலைகளுக்கு பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

அதற்கமைய பதுளை சரஸ்வதி தமிழ் வித்தியாலயத்தில் கல்விகற்கின்ற 160 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும், பாடசாலையின் அடிப்படைத் தேவைகளை நிறைவுசெய்வதற்காக ஒரு லட்சம் ரூபா நிதியும் பாடசாலை அதிபரிடம் வழங்கப்பட்டது. அத்துடன் பண்டாரவளை கொஸ்லந்த பகுதியிலுள்ள பதுளை ஸ்ரீகணேஷா தமிழ் மகாவித்தியாலயத்துக்கு கருங்கல்லில் வடிவமைக்கப்பட்ட பிள்ளையார், எலி ஆகிய திருவுருவச்சிலைகள் வழங்கப்பட்டன. (ச-41-66)



தேசிய மகளிர் வாரத்தை முன்னிட்டு, பச்சிலைப்பள்ளிப் பிரதேச மகளிர் பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் பிரதேச செயலகத்தில் கடந்த புதன்கிழமை சிரமதானம் முன்னெடுக்கப்பட்டது. (ச-25:8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மலர்வு
09 . 01 . 1944



உதிர்வு
06 . 03 . 2025

## சிவபாக்கியம் தில்லையம்பலம்

டச்சுவீதி, சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சிவபாக்கியம் தில்லையம்பலம் அவர்கள் கடந்த 06.03.2025 வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - தங்கமுத்து தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், தில்லையம்பலம் (ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர்) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற சிவகாமி மற்றும் சிவராசா (நில அளவையாளர்), காலஞ்சென்ற சிவயோகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கந்தையா மற்றும் புஸ்பராணி, ஆனந், காலஞ்சென்ற தவமலர் மற்றும் அன்னலட்சுமி, றஞ்சிதமலர், யோகராணி (ஜேர்மனி), பாஸ்கரன் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனியும், கதிர்காமநாதன் (UK) அவர்களின் சிறியதாயும், சியாமளாதேவி (கொழும்பு), சுதர்சன் (UK), சிறீகாந்தன் (UK), சுதாகரன் (UK), சுரேஸ் (UK), மகேந்திரகாந்தி (UK) ஆகியோரின் மாமியாரும், இளஞ்செழியன் (UK), சுஜீவா (UK), வித்யா (UK), லோஜினி (UK) ஆகியோரின் சித்தியும், கானுஜன், அபிலாஷ், சங்கீதா, சாயினி, தேனுஜா, ஷமீனா, டிவேன், அபியா, அமியா, ஷனன், சரணியா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.03.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

டச்சு வீதி,
சாவகச்சேரி.

**தகவல் :**
சி.தில்லையம்பலம் - 077 662 3743
வ.சிவராசா - 077 703 1996

(CS/44512) J-1

# வெளியேற உத்தரவு

ஆப்கானிஸ்தான் குடிமக்கள் பாகிஸ்தானில் இருந்தால், அவர்கள் மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் நாட்டைவிட்டு வெளியேற வேண்டும் என பாகிஸ்தான் அரசு உத்தரவிட்டுள்ளது. (ம)

**வீடு வாடகைக்கு உண்டு**

யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் அரசடி வீதியில் சிறிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 608 7687

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
23 . 02 . 1962



உதிர்வு
07 . 02 . 2025

## அமரர் திருமதி சாந்தமலர் குமரேஸ்வரன்

எங்கள் குடும்பத்தின் ஆணிவேரே
கண்மூடி விழிக்குமுன்னே
எம்மைக் கடந்து விட்டீர்
கல்லறை வாழ்வில் நெடுநாள் சென்றாலும்
எங்கள் நெஞ்சறையில் அழியாத ஓவியம்
மறு பிறப்பு இருப்பது உண்மையென்றால்
நீங்களே எங்கள் உறவாக வரவேண்டும்.

(cs.2684) (N -1)

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## வேலாயுதபிள்ளை பாலசுப்பிரமணியம்



தோற்றம்
12.12.1937

மறைவு
06.03.2025

உடுவிலைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கு கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதபிள்ளை பாலசுப்பிரமணியம் அவர்கள் கடந்த 06.03.2025 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை - பாக்கியம் தம்பதியின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசதுரை - பொன்னம்மா தம்பதியின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரி அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான சிவபாதசுந்தரம், கதிர்காமநாதன், இராசபூபதி, யோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற முருகதாஸ் மற்றும் மோகனதாஸ் (கனடா), கண்ணதாசன் (நோர்வே), ஹேமமாலினி (லண்டன்), ஜீவதாசன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், லீலாதேவி (ஜேர்மன்), ஜெகதீஸ்வரி (நோர்வே), பரமேஸ்வரன் (லண்டன்), சுதர்ஜினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரதீப், தயானந்தன், சாமிலா - பகீரதன், கௌசிகா, அபிலாஸ், ஆர்த்திக், ஹம்சிகா - மதுசன், நிரோஜன் - சிந்துஜா, சுருதிகா, தருஸ்கா ஆகியோரின் அன்புப் பேரனும், சமீரா, அனிரா, அமாஜன், பிரித்வின், பிரவின் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.03.2025) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மணியர்பதி வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

**தகவல்:**
குடும்பத்தினர்.
021 221 5708

(CS/57703) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மறைவு : 06.03.2011

## அமரர். திரு.எஸ்.ஆர். ஜெயப்பிரகாசம்

(ஓய்வுநிலை நிர்வாக அதிகாரி, பிரதேச செயலகம் - உடுவில்)

எமது அருமை அப்பா!
ஆண்டு பதின்னான்கு ஆனதென்ன
ஆறவில்லை எம் மனம்
என்றும் எம்மோடு வாழ்கின்றீர்கள்
குடும்பத்தின் ஒளி விளக்காய்
வாழ்ந்து காட்டினீர்கள்
பாசத்தால் எம்மை அணைத்தீர்கள்
பரிதவிக்கின்றேன் பாவி நான்

என்றும் உங்கள் நினைவுகளோடு ஏங்கி நிற்கும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(Cs57707) (N.1)




# 5 நாடுகளின் தேரர்கள் யாழ்ப்பாணம் வந்தடைவு!

யாழ்ப்பாணம், மார்ச் 9

தாய்லாந்து, மியான்மர், இந்தியா, இலங்கை, லாகோஸ் ஆகிய ஐந்து நாடுகளைச் சேர்ந்த தேரர்கள் இணைந்து அம்பாந்தோட்டை திஸ்ஸ மகாராம முதல் நயினாதீவு நாகதீப விகாரை வரை பாதயாத்திரையை முன்னெடுத்துள்ளனர்.

இந்தப் பாதயாத்திரையில் பங்கேற்றுள்ள 50 தேரர்கள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வந்தடைந்துள்ளனர்.

இதன்போது யாழ்.சுண்டுக்குளியில் அமைந்துள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு விஜயம் செய்த அவர்களை வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் வரவேற்றார். (ச-22, 66-131,9)


# மரண அறிவித்தல்

பிறப்பு
10
02
1944



இறப்பு
07
03
2025

## அமரர். திருமதி. மகாலட்சுமி அரசரட்ணம்

(ஓய்வு பெற்ற திட்டமிடல் அதிகாரி - சுகாதார திணைக்களம்)

காரைநகர் நீலிப்பந்தனையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி. மகாலட்சுமி அரசரட்ணம் அவர்கள் 07.03.2025 அன்று சிவபதமடைந்தார். அன்னார் ஓய்வுபெற்ற Dr. அரசரட்ணம் (பிரதி மாகாணப்பணிப்பாளர், கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம், வடகிழக்கு மாகாணம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நடராசா செல்லம்மா தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை சின்னத்தங்கம் தம்பதியினரின் பாசமிகு மருமகளும், அரவிந்தன் (அவுஸ்திரேலியா, முன்னாள் முகாமையாளர் - NDB வங்கி), அஜெந்தன் ( கணக்காளர் - UK ), ஆகியோரின் அன்புத்தாயாரும், சர்மிளா (அவுஸ்திரேலியா, முன்னாள் DFCC வங்கி உத்தியோகத்தர்) அபர்ணா (வைத்தியர், UK ) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற நேசரத்தினம் தனலட்சுமி , காலஞ்சென்ற சண்முகநாதன் ( முன்னாள் கட்டிட படவரைஞர் கட்டிட இலாகா), செந்தில்நாதன் (ஓய்வுபெற்ற வரி மதிப்பாளர் - உள்நாட்டு இறைவரித் திணைக்களம், கொழும்பு), சரவணபவன் (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற சிவானந்தன் (முன்னாள் ஆசிரியர்), ஆகியோரின் அன்புச்சகோதரியும், காலஞ்சென்ற மகேஸ்வரநாதன் (இளைப்பாறிய பிரதி ஆணையாளர், உள்நாட்டு இறைவரித்திணைக்களம்), காலஞ்சென்ற லீலாவதி, சுகிர்தமலர் , காலஞ்சென்ற பேரம்பலம் ( துறைமுக அதிகாரசபை , திருகோணமலை ) , காலஞ்சென்ற வல்லவாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனியும், அக்ஷரா, அபிநவ், ஆதிரா ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 09.03.2025 ஞாயிற்றுக்கிழமை பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு காலை 11 மணியளவில் இறுதிக்கிரியைகள் இடம்பெற்று பொரளை கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் : குடும்பத்தினர்
Dr. அரசரட்ணம் (கணவர்) - [illegible]
அரவிந்தன் (மகன்) - [illegible]
அஜெந்தன் (மகன்) - +94 777593765



# மரண அறிவித்தல்

தோற்றம்
02
04
1950



மறைவு
07
03
2025

## இராஜேந்திரன் பரமேஸ்வரி

காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகவும் கோவில் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜேந்திரன் பரமேஸ்வரி நேற்றுமுன்தினம் (07.03.2025) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - பாக்கியம் தம்பதியின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஆர்.கே. செல்லத்துரை - சரஸ்வதி தம்பதியின் மருமகளும், செல்லத்துரை இராஜேந்திரன் (மின்சார ஒப்பந்தகாரர்) அவர்களின் அன்பு மனைவியும், ஞானேஸ்வரன் (தென் அமெரிக்கா), அருளேஸ்வரி (பிரான்ஸ்), கௌரிஸ்வரி (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் - நல்லூர்), ஆகியோரின் அன்புத் தாயாரும், கெடி (தென் அமெரிக்கா), பிரபாகரன் (பிரான்ஸ்), ஜெயரூபன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் மாவட்ட செயலகம் - யாழ்ப்பாணம்), ஆகியோரின் மாமியாரும், ஞானம், றதுஷன், வைஸ்ணவி (தென் அமெரிக்கா), அபிஷா, அகிஷா, அர்ஷா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சண்முகலிங்கம் (மல்லாவி), காலஞ்சென்ற சதாசிவம் (தங்கொட்டுவை) மற்றும் அமிர்தலிங்கம் (வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (11.03.2025) செவ்வாய்க் கிழமை காலை 8.00 மணியளவில் 435/16, கோவில் வீதி, நல்லூரில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

இல.435/16, கோவில் வீதி,
நல்லூர்.
(நல்லூர் கந்தன் கருணை
இல்லத்திற்கு அருகாமையில்
உள்ள ஒழுங்கை)

தகவல்:
குடும்பத்தினர்
மருமகன் - 077 134 6079

(CS 57686) (N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைக்கு ஆட்கள் தேவை

யாழ்ப்பாணம் Stanley வீதியில் இயங்கிவரும் வாகன உதிரிப்பாக (Tata/Leyland) விற்பனை நிறுவனத்திற்கு அனுபவம் வாய்ந்த விற்பனைப் பிரதிநிதி தேவை.

- குறைந்தது இரண்டு வருட அனுபவம்.
- திறன்கள் - வாகன உதிரிப்பாகங்கள் பற்றிய அறிவு
  - விற்பனை மற்றும் வாடிக்கையாளர் சேவை அனுபவம்.
- வயது எல்லை - 20 - 40 வயது

அனுபவத்திற்கு ஏற்ப சிறந்த ஊதியம் மற்றும் சலுகைகள் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு : NST Motors (PVT) Ltd

177B, 179 Stanly Road, Jaffna.

021 221 4605, 076 962 5015

nstmotorsstores@gmail.com

(CS/57701) J-1

## வேலைவாய்ப்பு

யாழில் இயங்கும் பலசரக்கு கடை மற்றும் சுப்பர் மார்க்கட்டுக்கு கீழ்வரும் வேலையாட்கள் தேவை.

- Computer Billing + Casher (ஆண்/பெண்)
- Manager (02 Years Experience)
- Sales Assistant (உதவியாளர்)
- Accounts
- Packing (பெண்)

வயது எல்லை (18 - 35)

யாழ் மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

077 419 5209, 077 419 5015

(CS/57694) J-1



## ஈழத்து கைலாய ஜோதிட நிலையம்

இந்தியாவில் ஆன்மீகத்துறையில் 10 வருடங்களாக புகழ்பெற்ற

### அம்மன் அருள் வாக்கு

- கல்வியில் முன்னேற்றம் இல்லையா?
- குழந்தைப் பாக்கியம் கை கூடவில்லையா?
- கணவன் - மனைவி பிணக்கா ?
- பிரிவால் வேதனையா? தொழில் பிரச்சினையா?
- வாழ்வில் முன்னேற்றம் இல்லையா?
- மாங்கல்ய பாக்கியம் கை கூடவில்லையா?
- வெளிநாடு செல்லத் தடையா?
- அடிக்கடி நோய் ஏற்படுகின்றதா?

அனைத்திற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

இல. 20/26, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.

(முன் அனுமதி பெற்றுக்கொள்ளவும்.)

தொடர்புகளுக்கு :- 077 281 1234

(CS/2177) J-1

## திருக்கேதீஸ்வரத்திற்கான இலவச பஸ் சேவை

13.03.2025 வியாழக்கிழமை அன்று
இல.87,89, செட்டித்தெரு, நல்லூரிலிருந்து
இலவச பஸ்சேவை நடைபெறும்.

திருக்கேதீஸ்வரம் இந்துகலாசார மண்டபத்தில் காலை 7.00 மணி முதல் நண்பகல் 12.00 மணிவரை திருவாசக முற்றோதல் நடைபெற்று அதனைத்தொடர்ந்து மதிய முற்றோன்புதல் இடம் பெற்று மீண்டும் பஸ் யாழ்ப்பாணம் புறப்படும். பக்த அடியார்கள் யாவரும் இந் நிகழ்வில் பங்கேற்குமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறீர்கள். உங்களது ஆசனங்களை முன் கூட்டியே முற்பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி எண்: -

077 528 5213 / 076 207 4416

இந்து கலாசார மண்டபம்
திருக்கேதீஸ்வரம்,
மன்னார்.

தகவல்:
நிர்வாகம்
(திருவாசகம் முதியோர் இல்லம்)

(cs 57675) (N-1)

## வேலை ஆட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பிரபல நட்சத்திர ஹோட்டலுக்கு வேலை ஆட்கள் தேவை.

- Security guard
- Electrician
- Plumber
- Jaffna Style cook

முன் அனுபவம் வரவேற்கத்தக்கது.

உணவு, சீருடை வழங்கப்படும். திறமை மற்றும் அனுபவத்துக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும்.

உங்கள் சுயவிபரக் கோவையை (CV/ Bio Data) 070 789 6621 இலக்கத்திற்கு Whatsapp செய்யலாம்.

நேர்முகத் தேர்வு 18.03.2025 மு.ப 09.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை இடம்பெறும்.

தொடர்பு:- 070 789 6621

(CS/57688) J-1

## விற்பனைக்கு

தனங்களப்பு - மன்னார் வீதியில் அமைந்துள்ள சகல வசதியும் கொண்ட வீடு மற்றும் காய்க்கும் தென்னைகள் நிறைந்த 60 பரப்பு தென்னந்தோட்டம் விற்பனைக்கு.

தொடர்பு:- 0094 77 425 3573

(CR/44524) J-1

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.

ஒரு சதுர அடி - 75 ரூபாய்

நிலம் இழுத்து பதிக்க - 100 ரூபாய்

077 334 1281

## மணமகள் தேவை

1978, இந்து, சதயம், ENGINEER

பூர்வீகம் - நல்லூர், வதியுமிடம் - AUSTRALIA

மணமகன் பதிவு இல: 11511.

தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.

இணையவழி திருமணசேவை.

அழையுங்கள் 076 664 9401

www.EQMarriageService.com

(CS/29913B) J-1

## மணமகன் தேவை

1996, இந்து, பரணி, TEACHER

பூர்வீகம் - யாழ்ப்பாணம், வதியுமிடம் - விசுவமடு

மணமகன் பதிவு இல: 11518.

தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.

இணையவழி திருமணசேவை.

அழையுங்கள் 076 664 9401

www.EQMarriageService.com

(CS/29913A) J-1

## காணி விற்பனைக்கு

வட்டுக்கோட்டை மூளாய்றோட், உடுக்கியவளை பிள்ளையார் வீதியில் 3.5 நிலப்பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

076 209 9640, 0044 795 654 6978

(CS/28675) J-1

## காணி விற்பனை

காங்கேசன்துறை K.K.S Road ஐ முகப்பாக கொண்ட 2 பரப்புக் காணி.

மொத்த விலை 23 மில்லியன்

077 767 6169

(CR/44514) J-1

## வீடு வாடகைக்கு தேவை

நிறுவனம் ஒன்றின் பாவனைக்கு மேல் மாடி வீடு வாடகைக்கு தேவை.

கோவில் வீதி, கே.கே.எஸ். வீதி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் உடன் வாடகைக்கு தேவை.

(வீட்டு உரிமையாளர் மட்டும் தொடர்புகொள்ளவும்)

077 711 0862 / 077 999 9020

(cs 57697) (N-1)

## தேவை

யாழில் இயங்கும் சுப்பர்மார்க்கட்டுக்கு காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றினை விற்பனை செய்யக்கூடிய நபர்கள் தேவை.

தொடர்பு:- 077 419 5209


(CS/57693) J-1

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம், கிளிநொச்சியில் இயங்கிவரும் பிரபல நகை நிறுவனத்திற்கு 18 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்ட ஆண், பெண் வேலையாட்கள் தேவை. சம்பளம் 30,000/- முதல் 50,000/- வரையும் அத்துடன் கொமிஷனும் தரப்படும். யாழ்ப்பாணம், கிளிநொச்சி நகரத்திற்கு அருகில் உள்ளவர் களும் அனுபவம் உடையவர்களும் விரும்பத்தக்கது.

தொடர்பு: யாழ். 077 282 4648

கிளி. 077 213 4344

# மாமனிதர் சிவநேசன் நினைவேந்தல்!

யாழ்ப்பாணம், பெப். 9

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் மாமனிதர் கிட்டினர் சிவநேசனின் 17 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. கடந்த 2008 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 6 ஆம் திகதி மகாசிவராத்திரி தினத்தில் மாங்குளம் பகுதியில் இராணுவத்தின் ஆழ ஊடுருவும் அணியினர் நடத்திய கண்ணி வெடித் தாக்குதலில் மாமனிதர் கிட்டினர் சிவநேசன் படுகொலை செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ச-22,66)


## தெல்லிப்பளையில் வகுப்புக்கள்

அடிப்படை சிங்களம், ஆங்கிலம், கணிதம், கணிணி வகுப்புக்கள் தனியாக நடாத்தப்படும்.

மேலதிக விபரங்களுக்கு

071 8676481 / 077 0035908

## வீடு வளவு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கல்வியங்காடு நல்லூரில் ( பிரதான வீதிக்கு அருகாமையில் ) வீட்டுடன் சேர்ந்த காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 076 1481075 / 077 8645502

## SRK Employment Manpower Service

நீங்கள் வேலைவாய்ப்பொன்றை or வேலையாட்களை தேடுகின்றீர்களா? அனைத்து விதமான வேலைகளையும் or வேலையாட்களையும் நாம் வழங்குகின்றோம்.

(இலங்கை முழுவதுமான சேவை)

அலுவலகம் அமைந்துள்ள மாவட்டம் - வவுனியா

(வட்சப்) 074 170 2315

## வீடு வாடகைக்கு

கோண்டாவில் புகையிரத நிலைய வீதியில் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு:-
Whatsapp:- 077 545 3320

## காணி விற்பனைக்கு

யாழ். ஊர்காவற்றுறை பிரதான வீதியில் தம்பாட்டி சந்தியில் 16 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

076 979 3163

(CS/57696) J-1

## வேலையாள் தேவை

கோயில் வேலைக்கு வேலையாள் தேவை.

077 935 0273

(CS/57665) J-1

## கடன் வசூலிக்கும் அதிகாரி

இலங்கையின் முன்னணி வர்த்தக வங்கியொன்றின் துணை நிறுவனத்தில் பணியாற்றுவதற்கு

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, பதுளை, பண்டாரவளை, நுவரெலியா, கண்டி மற்றும் நாடு முழுவதும்

வெற்றிடங்கள் உள்ளன.

வயது 55க்கு குறைந்த, ஓய்வுபெற்ற பாதுகாப்பு சேவை அதிகாரிகள் (சிறப்பு)

தொடர்பு: 077-2762678


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய மீனவர்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை

மன்னார், மார்ச் 9

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 17 பேருக்கு மன்னார் நீதிமன்றம், ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதித்து உத்தரவிட்டுள்ளது.

இலங்கை கடற்பகுதியில் பல்வேறு சந்தர்ப்பங்களில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்களுக்கு எதிரான வழங்கு மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்காக வந்தது. இதன்போதே, மீனவர்கள் 17 பேருக்கு 10 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட 12 மாத சிறைத் தண்டனையும், மேலும் ஒரு மீனவருக்கு இரண்டரை லட்சம் ரூபா தண்டப் பணமும் விதிக்கப்பட்டுள்ளது. (ம-56)

## இரவில்...

அத்துமீற ஆரம்பித்துள்ளனர். இரவில் பெண்களின் வீடுகளுக்குச் சென்று உதவி செய்வது என்ற போர்வையில், 'உங்களுக்குக் காதலன் இருக்கின்றாரா?' 'முகத்தைக் காட்ட வெக்கமா?' இவ்வாறான அருவருக்கத் தக்க கேள்விகளைக் கேட்கின்றனர். இவ்வாறு அத்துமீறுபவர்கள் அரசாங்கத்தின் முகவர்களாகவும் காணப்படுகின்றனர். இந்தக் கேவலங்களைச் செய்வோருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் - என்றார். (அ-ம-26)

## படையினரிடம்...

காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளால், முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள கோத்தாபய ராஜபக்ச கடற்படை முகாமுக்கு முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதன் பின்னர், வட்டுவாகல் பாலத்தினூடாக, தமது உறவுகளை இறுதியாகக் கையளித்த இடம்வரைக்கும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களால் பேரணியும் முன்னெடுக்கப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவகாரம் உள்ளிட்ட எந்தவொரு விடயங்களிலும் நாங்கள் இலங்கை அரசாங்கத்தின் விசாரணைகளையும், உள்ளகப் பொறிமுறைகளையும் நம்பவில்லை. இந்த விடயத்தில் சர்வதேச விசாரணைகளை மட்டுமே நாம் கோருகின்றோம். காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு இழப்பீடுகளை வழங்கி பிரச்சினையை முடித்துவைக்கும் அரசாங்கத்தின் செயற்பாட்டை நாங்கள் கடுமையாகக் கண்டிக்கின்றோம் என்று போராட்டத்தில் ஈடுபட்ட உறவுகள் தெரிவித்தனர்.

கவனவீர்ப்புப் போராட்டத்தின்போது வட்டுவாகல் விகாரைக்கு செல்லும் வழியில் அதிகளவான பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## மாணவர்களுக்கு...

பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து விற்பனை செய்யப்படவிருந்த பெருமளவு மாவா பாக்கும், மாவைத் தயாரிப்பதற்காக வைக்கப்பட்டிருந்த போதைப்பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய, வண்ணார்பண்ணை சிவன் கோவில் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின்போதே மேற்படி மாவாப் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில் அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-26-27)

## கல்சியம்...

கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த பேரம்பலம் யோகேஷ்வரன் (வயது-64) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். குறித்த நபர் நேற்றுமுன்தினம் கல்சியம் நீக்கி திரவத்தை அருந்தியுள்ளார். இதையடுத்து அவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## அதானியை...

ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வலுசக்தி அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அதானி குழுமத்தால் உற்பத்திசெய்யப்படும் மின்சாரத்தின் விலை அதிகமாக இருந்ததால், அந்த விலை நிர்ணயங்களை மறுபரிசீலனை செய்யுமாறுதான் நாங்கள் கோரிக்கையை முன்வைத்தோம். இதையடுத்தே, அதானி நிறுவனம், குறித்த திட்டத்திலிருந்து விலகுவதாகத் தெரிவித்து, இலங்கை முதலீட்டுச் சபைக்கு ஒரு கடிதம் அனுப்பியுள்ளது.

எனினும், அதானி காற்றாலை மின்சாரத் திட்டம் இன்னமும் முழுமையாக இரத்துச்செய்யப்படவில்லை. குறித்த விடயத்தைப் பரிசீலிக்குமாறு தொடர்புடைய நிறுவனத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. பதில் எதிர்மறையானதாக இருந்தால் மாற்று உபாயம் தொடர்பில் ஆலோசிக்கப்படும் - என்றார். (அ-ம-இ)

## 450,000...

குரங்குகளின் தொல்லை காரணமாகவும், வெள்ளை ஈயின் தாக்கம் காரணமாகவும், நாட்டில் தற்போது தேங்காய்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால், பல உள்ளூர் தேங்காய்எண்ணெய் உற்பத்தி நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன.

இதையடுத்தே, 4 லட்சத்து 50 ஆயிரம் பேர் முற்றாகவும், பகுதியளவிலும் வேலைகளை இழந்துள்ளனர். (அ-ம-இ)

## எரிபொருள்...

அதனால் ஏற்பட்ட நிதியிழப்புத் தொடர்பில் பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நேற்று அவசர கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 24 கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அவற்றில் 22 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் எரிபொருள் விற்பனை நிலையங்கள் உள்ளன. கூட்டுறவுச் சங்கங்களின் பெரும் நிதிவருவாயாக தற்போது எரிபொருள் விற்பனை உள்ள நிலையில், இந்த இலாபக் குறைப்பால் ஏற்பட்ட பாதிப்பை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பிலேயே இந்தக் கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. இதன்போது, அடுத்தடுத்து கலந்துரையாடல்களை நடத்தி, விரிவான மனுவொன்றை அரசாங்கத்துக்கு அனுப்பிவைப்பது தொடர்பில் நடவடிக்கை எடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-ம-17)

## யாழ்ப்பாணக்...

யாழ்ப்பாணக் கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையிலான 'பொன் அணிகளின் போர்' கிரிக்கெட் ஆட்டம், யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்தது.

வட்டுகோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 153 ஓட்டங்களைப் பெற்றது. தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 167 ஓட்டங்களைப் பெற்று, 14 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது.

இரண்டாவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி நேற்றுமுன்தின இரண்டாம்நாள் முடிவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 69 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. எனினும், மிகச் சிறப்பாக விளையாடிய சிதம்பரலிங்கம் மதுசனும் சுரேஷ் கோபிஷனும் அணியைச் சரிவில் இருந்து மீட்டனர்.

இதனால், யாழ்ப்பாணக் கல்லூரி அணி 159 ஓட்டங்கள் என்ற பலமான நிலையை அடைந்தது.

120 பந்துகளை எதிர்கொண்ட மதுசன் 32 ஓட்டங்களையும், 84 பந்துகளை எதிர்கொண்ட கோபிஷன் 35 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் குமணதாசன் சாருஷன் 4 விக்கெட்டுகளையும் பிரேமநாயகம் மதுசன் 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

146 ஓட்டங்களை இலக்காகக்கொண்டு இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி 35.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 86 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வியைத் தழுவியது.

துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் பற்குணம் மதுஷன் தனித்து போராடி 73 பந்துகளை எதிர்கொண்டு 35 ஓட்டங்களைப் பெற்றார். வேறு எவரும் இரட்டை இலக்க எண்ணிக்கையை எட்டவில்லை.

பந்துவீச்சில் சிதம்பரலிங்கம் மதுசன் 7 ஓட்டமற்ற ஓவர்கள் அடங்கலாக 16.3 ஓவர்களில் 23 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்களைக் கைப்பற்றினார். (அ-ம-இ)

## வடக்கின்...

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை இந்த ஆட்டம் ஆரம்பித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 131 ஓட்டங்களைப் பெற்றது. அன்டன் நிரேஷான் அபிஷேக் அதிகபட்சமாக 27 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் ஜெயச்சந்திரன் அஷ்நாத் 5 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 181 ஓட்டங்களைப் பெற்றது. ரேமன்ட் அனுசாந்த் அதிகபட்சமாக 86 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் ரஜித்குமார் நியூட்டன் 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இரண்டாவது இன்னிங்ஸுக்காகக் களமிறங்கிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில், நேற்றுமுன்தின இரண்டாம்நாள் முடிவுக்கு வந்தது.

நேற்றுத்தொடர்ந்துதுடுப்பெடுத்தாடிய அந்த அணி அனைத்து விக்கெட்களையும் இழந்து 142 ஓட்டங்களைப் பெற்றது.


93 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 5 விக்கெட்டுக்களை இழந்து வெற்றிபெற்றது.

சிறந்த துடுப்பாட்ட வீரராக ரேமன் அனுஷாந் (சென். ஜோன்ஸ்), சிறந்த பந்துவீச்சாளராக ஜெயச்சந்திரன் அஷ்நாத் (சென். ஜோன்ஸ்), சிறந்த களத்தடுப்பாளராக அன்டன் நிரோஷன் அபிஷேக் (யாழ். மத்திய கல்லூரி), சிறந்த சகலதுறை வீரராக ரஞ்சித்குமார் நியூட்டன் (யாழ். மத்திய கல்லூரி), சிறந்த விக்கெட் காப்பாளராக கிருபாகரன் சஞ்சுதன் (சென். ஜோன்ஸ்), ஆட்டநாயகனாக ஜெயச்சந்திரன் அஷ்நாத் (சென். ஜோன்ஸ்) ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (அ-ம-125)

## தவறான...

பொலிஸார் தெரிவித்துள்ளனர். மரணம் தொடர்பில் கரவெட்டி மரண விசாரணை அதிகாரி வே. பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை நெல்லியடிப் பொலிஸார் நெறிப்படுத்தினார்கள். (அ-ம-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் மாணவத் தலைவர்களுக்கான வருடாந்த சின்னம் சூட்டும் நிகழ்வு, கல்லூரியின் அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்லூரியின் பழையமாணவர் சு.சிறீகரன் கலந்து கொண்டு 150 ஆவது மாணவ தலைவர்கள் அணிக்கு சின்னம் சூட்டிவைத்தார். (ச-25,28)



சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வு ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (ச-41-66)





# வடக்கு அபிவிருத்தி கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச். 9

வடமாகாண அபிவிருத்தி அலுவலர்கள் சங்கத்தினருக்கும் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் அதிகாரிகளுக்குமிடையிலான கலந்துரையாடல் அமைச்சு அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதன்போது, அபிவிருத்திச் செயற்பாடுகளில் முழுமையான அதிகாரமளிப்புக்கான அங்கீகாரம், உரிமைப்பாடுகள், கொடுப்பனவுகள், சுற்றுநிருபங்களுக்கு மாறான திணைக்களத் தலைவர்களின் அடாவடித்தனங்கள் போன்ற விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன. அதே வேளை, கையொப்ப உரித்தளிப்பு முழுமையாக, முதன்மையாக அபிவிருத்தி விடயதானங்களில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கே உரித்தானது என்பதை அமைச்சு உறுதிசெய்தல் போன்ற விடயங்களும் விவாதிக்கப்பட்டன. (ச-25,9)

## பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாணத்தில் உள்ள மாபிள் கடை ஒன்றிற்கான பதவி வெற்றிடம்

1. விற்பனை பிரதிநிதி
2. சிட்டை எழுதுநர் ஆகியோர் தேவை

நல்ல ஆளுமையும், பேச்சு வல்லமையும், மாபிள், பிளம்பிங் சம்பந்தப்பட்ட அனுபவமும் இருக்கக் கூடியவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 077 249 6443 076 135 9302

## காணி விற்பனைக்கு

கௌதாரிமுனை பிரதான வீதியில் உள்ள ஒரு பக்கம் கடல் மறுபக்கம் உயர் மின் அழுத்த வடம் செல்லும் பிரதான வீதி கொண்ட 14.5 ஏக்கர் உறுதிக்காணி அவசர பணத்தேவை கருதி விற்பனைக்கு உள்ளது. விலை பேசித் தீர்மானிக்கலாம்.

077 736 8286, 076 635 6691

## வேலைக்கு ஆட்கள் தேவை

யாழ் நகரில் உள்ள பிரபல அச்சகம் ஒன்றிற்கு புத்தகம் கட்டுநர் தேவை. வேலை பழக விரும்புபவர்களும் விரும்பத்தக்கது. தெரிவு நடைபெறும் நேரம் ஞாயிறு காலை 10.00 am தொடக்கம் 1.00 pm வரை.

தொடர்பு:- 077 601 7773

## வீடு வாடகைக்கு உண்டு

பலாலி வீதியில் வீதி ஓரமாக திருநெல்வேலி சந்தியிலிருந்து 500m தூரத்தில் 5 அறைகளுடன் 3 வாகனதரிப்பிட வசதி கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

(CS/57690B) J-1

077 306 8993, 077 608 6209

## கடை வாடகைக்கு

[அலுவலக தேவைக்கும் உகந்தது]

இடம் : பருத்தித்துறை வீதி ஆரிய குளம் சந்திக்கு அருகாமையில்

(CS/57690) J-1

076 869 3111

## Shop Assistant / Worker

தென்மாகாணத்தில் உள்ள பலசரக்கு கடை ஒன்றில் பணிபுரிவதற்கு ஆண் உதவியாளர் தேவை.

சம்பளம் - 40000/-

உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.

Location :- S.A.W & Sons, Hambantota.

Contact:-

077 480 3379

## வீடு வாடகைக்கு உண்டு

A /9 வீதி , கச்சேரிக்கு அண்மையாக 3 அறைகள் 2 A /C உடன் நவீன மயப்படுத்தப்பட்ட மற்றும் 4 வாகனதரிப்பிட வசதியுடன் வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு

(CS/57690A) S

0773068993, 0758458484

## வாடகைக்குத் தேவை

யாழ் நகர் எல்லைக்குள் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள உணவகம் (Restaurant) ஒன்றிற்கு கடை/ வீடு வாடகைக்குத் தேவை.

(CS/57689) J-1

076 803 5352, 071 924 6420

## காணி விற்பனைக்கு

- நல்லூர் சங்கிலியன் வீதியில் 2 பரப்பு காணி விற்பனைக்கு.
- ஆடியபாதம் வீதி திருநெல்வேலியில் வீதியிலிருந்து இரண்டாவது காணி 2 பரப்பு விற்பனைக்கு.

(cs 2697) (s)

0777948012

## வாடகைக்கு

KKS றோட், யாழ் இந்துக் கல்லூரிக்கு 200m தூரத்தில் மாடிவீட்டில் அறைகள் வாடகைக்கு உண்டு

(cs 2690) (S)

0779862572

## வேலையாட்கள் தேவை

யாழ் நகர்ப் பகுதியில் இயங்கி வரும் அழகு சாதனப் பொருட்கள் விற்பனை நிலையம் ஒன்றில் பணி புரிய ஆண் வேலையாட்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

(யாழ் மாநகர சபை எல்லைக்கு உட்பட்டவர்களாயின் விரும்பத்தக்கது)

தொடர்பு: 077 716 4125

## மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 12 . 1956



மறைவு 06 . 03 . 2025

### கதிர்காமர் பாக்கியலீலா

விடத்தற்பளை மிருசுவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமர் பாக்கியலீலா கடந்த 06.03.2025 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வீரசிங்கம் காலஞ்சென்ற பாக்கியம் தம்பதியின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - இராசம்மா தம்பதியின் மருமகளும், கதிர்காமர் அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற கவிதா மற்றும் யசிந்தா (பிரான்ஸ்), றூபனா, ரேணுகா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மயூரன் (பிரான்ஸ்), பரஞ்சோதி, அன்பழகன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், விக்கினேஸ்வரன், இரஞ்சிதமலர், இந்திராணி, யோகராணி, திருச்செல்வம் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் யோகசுந்தரம், காலஞ்சென்ற அருந்தவராசா மற்றும் இராஜமனோகரன், தேவகி, அமரசிங்கம், குலசிங்கம், காலஞ்சென்ற சரஸ்வதி ஆகியோரின் மைத்துனியும், சுயன் (பிரான்ஸ்), சியானி (பிரான்ஸ்), துபிசன் (பிரான்ஸ்), நிருஜா, சயினிகா, அக்சயன் (பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.03.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சம்பாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விடத்தற்பளை,
மிருசுவில்.

தகவல் :
குடும்பத்தினர்

(cr.44527) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாகன சாரதி தேவை

**கனரக வாகன சாரதி அனுமதி பத்திரமுடைய**
**லொறி சாரதி தேவை**

- வயது: 30 - 45
- வேலை நேரம் : காலை 8.00 பிற்பகல் 3.00 மணிவரை
- யாழ். மாவட்டத்திற்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது
- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

(cs.57659) (N-1)

இல.6, பந்தியடி வீதி, ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 022 2147

## விஸ்டம் தொழில்நுட்பக் கல்லூரி

No: 63, சிவன் வடக்கு வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்

**புதிய விசேட பிரிவுகள் ஆரம்பம் 13.03.2025**

A/L, 2025/ 2026 உயிர்முறைமைகள் தொழினுட்பவியல்
A/L, 2025/ 2026 பொறியியற் தொழினுட்பவியல்
A/L, 2025 ICT விரைவு வகுப்பு (6 மாதத்தில் பாடத்திட்டம் பூர்த்தி செய்யப்படும்.

◆ துரித மீட்டல் வினாத்தாள் வகுப்புக்கள் ◆ வினைத்திறனான பயிற்சிப் பரீட்சைகள்
◆ செயன் முறைப் பயிற்சி வகுப்புக்கள்

அனைத்து தொழினுட்பப் பிரிவு மாணவர்களும் இணைந்து கொள்ளலாம்)
மேலதிக தகவல்களுக்கு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்புகளுக்கு: 076 552 9093, 077 248 7774

(CR/44513) J-1

## தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 40 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம். விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

(CS/57653) J-1

தொடர்பு:- Whatsapp:- 0044 740 537 3526

## தேடுகிறோம்

மயிலிட்டி தபால் கந்தோர் அதிபராக கடமையாற்றிய திரு ஞானமணி அன்ரனியுடன் 1970 இலிருந்து 1974 வரை வேலை பார்த்த திரு. புஷ்பதேவன் என்பவரோடு ஞானமணி அன்ரனி குடும்பத்தினர் தொடர்பு கொள்ள விரும்புகிறார்கள். விபரம் அறிந்தவர்கள் தயவுசெய்து கீழ் கண்ட வாட்ஸ் அப் இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

(CS/57668) J-1

WhatsApp No: + 1609 304 3841 (USA)

## தேவை

மானிப்பாயில் இயங்கும் வாகன சுத்திகரிப்பு நிலையத்திற்கு அனுபவம் / அனுபவமற்ற வேலையாட்கள் தேவை.

077 232 3000

## காணி விற்பனைக்கு

55 New செம்மணி வீதி கல்வியங்காட்டில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
**(கிணற்றுடன்)** - tube well,
**நல்லூர் கோவில் 1.7** Km,
**கல்வியங்காடு சந்தி 350** m

(cs.57667) (N-1)

077 185 4870

## SPOKEN ENGLISH & GRAMMAR

ஆங்கிலம் பேச விரும்பும்
தொழில் புரிவோர் Students
Grade 7 to GCE O/L, A/L, பட்டதாரிகள்
கொழும்பில் பலவருடம் கற்பித்த அனுபவ
ஆசிரியர் : K. Ganesh BA
யாழ் நாவலர் - அன்னசத்திர வீதி.
077 766 8725

## காணி விற்பனைக்கு

கோணாக்கம்பியன்புலம் கைதடி மானிப்பாய் வீதியில் 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

(CS/57673) J-1

077 636 7354

# தமிழரசுக் கட்சியின் மத்திய குழு இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 9

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்தியக் குழுக்கூட்டம் வவுனியாவில் இன்று நடைபெறவுள்ளது. உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் சில அறிவிப்புக்கள் வெளிவந்துள்ள நிலையில், அது தொடர்பில் இன்று சிறப்புக் கவனம் செலுத்தப்படும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம-26-110)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து 2.5 கிலோமீற்றர் தூரத்திலும், பல்கலைக்கழக வளாகத்திலிருந்து 500 மீற்றர் தூரத்திலும் 2 1/4 பரப்பு காணியில் 4 அறைகள், வரவேற்பறை, சமையலறை, 2 குளியலறை, விறாந்தை தனிக்கிணறு என 2000 சதுர அடியில் அமைந்த பெரிய வீடு பாவனைக்கு ஏற்ற வகையில் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-
Whats app:-
+61 421 290 240

(CS/57250) J-1

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் யாழ்நகர் பகுதி வெலிங்டன் சந்தியிலிருந்து ஆஸ்பத்திரி செல்லும் பே.பொன்னம்பலம் பிரதான வீதியில் இருந்து 50 மீற்றர் தூரம் சகல ஆவணங்களுடன் இரண்டு பரப்பு மூன்று குளி காணி விற்பனைக்கு வீடுகள் அமைப்பதற்கு ஏற்ற இடம்**


- **ஆஸ்பத்திரி 100 மீற்றர்**
- **கீல்ஸ் புட்சிற்றி 50 மீற்றர்**
- **ஸ்ரான்லி றோட் வெலிங்டன் சந்தி 50 மீற்றர்**
  **யாழ் பஸ்நிலையம் 200 மீற்றர்**

**தரகர் தேவையில்லை**

தொடர்பு: 076 755 8606 - Whatsapp
077 638 5683

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 20.02.2025 வியாழக்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்
**கலாபூசணம்**

### செல்லையா விஸ்வலிங்கம் ஸ்தபதி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 10.03.2025 திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 12.03.2025 புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் **எமது அழைப்பு தவறவிடுபட்டவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக் கின்றோம்**

**நீர்வேலி வடக்கு,**
**நீர்வேலி.**

**குடும்பத்தினர்.**
தொ.பே: 077 432 9153
074 190 6182

(Cs.57660) (N.1)

# Vacancy

Join Our Team – Accountants, Assistant Accountants & Bookkeepers (Jaffna Office)

We, Ace Accountants & Tax Consultants, are a UK-based, reputed firm of accountants, highly regarded for our expertise and commitment to excellence. We are looking for intelligent, detail-oriented professionals to join our Jaffna office.

**What We Offer:**

- ☑ **Attractive Salary**
- ☑ **Full Training for Bookkeepers – No experience? We'll train you!**
- ☑ **Career Growth & Development**

**Requirements:**

- Work Hours: 12:30 PM – 9:30 PM (Monday – Friday)
- Accountancy Qualification required for Accountants & Assistant Accountants
- School leavers & fresh graduates will be considered for Bookkeeper roles
- Strong English Skills (Written & Spoken)
- Good Computer Skills & Quick Learning Ability

**How to Apply:**

✉ Email your CV to us, and we will contact shortlisted candidates. No direct calls to our office.

**E: careers@aceaccountants.co.uk**



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் … அலுவலகத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.03.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

நட்புநார் அற்றன நல்லாரும் அஃகினார்
அற்புத் தளையும் அவிழ்ந்தன, - உட்காணாய்;
வாழ்தலின் ஊதியம் என்னுண்டாம்? வந்ததே
ஆழ்கலத் தன்ன கலி.

— நாலடியார்

மலை : 34 | வள்ளுவர் ஆண்டு : 2055 | மாசி 25 | ஞாயிற்றுக்கிழமை (09.03.2025) | சிகரம் :134

# திசைகாட்டியை வடக்கில் உறிஞ்சும் ஒட்டுண்ணிகள்



○ நரசிம்மன்

இலங்கை நாடாளுமன்றத் தேர்தல் வரலாற்றில் முதன்முறையாக தமிழர் தேசத்தில் வடக்கு மாகாணத்தில், குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் சிங்களத் தேசியக் கட்சி ஒன்று ஒரு ஆசனத்தையாவது பெற்றுக்கொள்வதேகுதிரைக்கொம்பாக இருந்துவந்த நிலையில், தேசிய மக்கள் சக்தி என்று தம்மை உருமாற்றிக் கொண்டுள்ள ஜே.வி.பி . சுளையாக ஆசனங்களைக் கைப்பற்றிக் கொண்டமை ஒரு புறநடை.

யாரும் எதிர்பார்க்காதவகையில் எதிர்வு கூறல்களுக்கு அப்பாற்பட்டு இந்த முடிவு அமைந்திருந்தது. போர் தின்ற மண்ணில், தமிழ்த் தேசியத்தின் தடத்தில் வீறுகொண்டெழுந்த தேசத்தில் திருப்பு முனையாக நடந்தேறியதுதான் நாடாளுமன்றத் தேர்தல் 2024. நாடாளுமன்றத் தேர்தலிலும், இதற்கு முன்னர் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலிலும் தேசிய மக்கள் சக்தி பெற்ற வெற்றியை அந்தக் கட்சி தொடர்ந்து தக்கவைத்துக் கொள்ளுமா என்ற பெருஞ்சந்தேகம் இப்போது எழுந்திருக்கிறது.

தமிழ்த் தேசியம் பேசியபடி காலத்தை ஓட்டிக்கொண்டிருந்த கட்சிகளின் சுயநல அரசியல் போக்கின் மீதான வெறுப்பும், அநுரகுமார திஸாநாயக்க என்ற தனிமனித ஆளுமை மீதான ஈர்ப்புமே வடக்கில் தேசிய மக்கள் சக்தியின் மீது தமிழ் மக்கள் 'குருட்டுத்தனமான' நம்பிக்கை வைப்பதற்குப் போதுமான காரணிகளாக இருந்தன. தேசிய மக்கள் சக்தியினால் நாடாளுமன்றத் தேர்தலில் நிறுத்தப்பட்டவர்கள் எவரும் தமிழ் மக்களுக்காக எதையும் சாதித்தவர்களல்லர். தமிழ் மக்களுக்குப் பரிச்சயமானவர்கள்கூட இல்லை. ஆனாலும், தமிழ்த் தேசியம் பேசிக்கொண்டு தங்கள் சுயலாபப் பணிகளில் ஈடுபடுபவர்களுக்கு ஒரு பாடம் புகட்ட வேண்டும் என்ற நோக்கோடு, 'கண்ணை மூடிக் கொண்டு' திசைகாட்டிக்குப் போட்ட வாக்குகள் யார், யாரையோ எல்லாம் நாடாளுமன்ற உறுப்பினர்களாக்கியிருக்கின்றன.

ஆனாலும், இந்த உண்மை தெரியாமல் தேசிய மக்கள் சக்தி இப்போது வடக்கில் நடந்து கொள்ளும் விதம், தங்கள் சொந்தக் கட்சிகள் மீது வைத்திருந்த வெறுப்பைவிடப் பல மடங்கு வெறுப்பை ஏற்படுத்தி வருகின்றது என்ற கசப்பான உண்மையை அந்தக் கட்சி ஏற்றுக் கொண்டு தான் ஆக வேண்டும்.

"ஒரு ஐந்து வருடத்துக்குத் தானே?" என்று தங்கள் சொந்த அபிலாஷைகளை அடகுவைத்து மக்கள் கொடுத்த ஆணையைத் துஷ்பிரயோகம் செய்யும் வகையில், சொந்தக் காசில் சூனியம் வைப்பதைப் போன்று இந்த வெற்றியை தாரைவார்க்கும் வகையில் அந்தக் கட்சி செயற்படுகின்றதா? தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளிக்கின்றோம் என்ற பெயரில் கடந்த கால ஆட்சியாளர்களுக்கு முட்டுக்கொடுத்தவர்களால் திட்டமிட்டு தேசிய மக்கள் சக்தியின் வாக்கு வங்கி சரிவடையச் செய்யப்படுகின்றதா? போன்ற பல சந்தேகங்கள் எழத் தொடங்கியுள்ளன.

2024ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்திலும், வன்னித் தேர்தல் மாவட்டத்திலும் மூன்றாம் இடத்தையே அநுரகுமார திஸாநாயக்கவால் பெற்றுக் கொள்ள முடிந்தது. அதுவும் மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் அவர் வடக்கில் தோல்வியை எதிர்கொண்டிருந்தார். ஆனால் இரண்டு மாதங்களுக்குள் நடத்தப்பட்ட நாடாளுமன்றத் தேர்தலில் அவரது கட்சி மிகப்பெரிய வெற்றியைப் பதிவு செய்தது. அதுவும், தமிழ்த் தேசியக் கட்சிகளை எல்லாம் தூக்கி விழுங்கி இந்த வெற்றியைப் பெற்றுக்கொண்டது. இதற்குக் காரணம் என்ன? திடீர் வாக்கு வங்கி அதிகரிப்பின் பின்னணி என்ன? ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மீதான நம்பிக்கை தமிழ் மக்களிடத்தில் துளிர்விட்டிருந்த நிலையில் அதை உறுதிப்படுத்தும் வகையில் அதிரடி நடவடிக்கையை ஜனாதிபதி அநுர மேற்கொண்டிருந்தார். வடக்கு மாகாணத்தின் ஆளுநராக முன்னாள் மாவட்டச் செயலராக இருந்த நா.வேதநாயகன் நியமிக்கப்பட்டார்.

> ”
>
> **ஊழல் - அரசியல் தலையீடு தவறிழைத்த அதிகாரிகளுக்கான பதவி உயர்வு என கடந்த அரசாங்கங்களின் காலத்தில் அவர்களுக்கு 'கூஜா' தூக்கியவர்கள் மீதான வெறுப்புணர்வால், கணிசமான அரசாங்க அதிகாரிகள் தேசிய மக்கள் சக்தியை ஆதரித்தது மாத்திரமல்லாது, மக்களையும் ஆதரிக்கத் தூண்டியுமிருந்தனர். வெற்றி பெறுவதைவிட அதை தக்க வைப்பது முக்கியம். இந்த இடத்தில்தான் தேசிய மக்கள் சக்தி சறுக்கத் தொடங்குகின்றதா என்று எண்ணத்தோன்றுகின்றது.**

யாழ்ப்பாண மாவட்டத்தில் மாவட்டச் செயலராக வேதநாயகன் பணியாற்றிய போது, கோத்தாபய ராஜபக்சவின் ஆட்சியில், அப்போதைய மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக இருந்த நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரால் அவர் பழிவாங்கப்பட்டிருந்தார். இதை அந்த அரசியல்வாதி மறுத்தாலும், சந்தேகத்துக்கிடமின்றி மக்கள் எல்லோருக்கும் இந்த உண்மை தெரியும்.

மிகச் சிறந்த - நேர்மையான நிர்வாகி என்று பெயர் எடுத்த வேதநாயகன், சலுகைகளுக்காக விலைபோகாத ஒருவர். அத்துடன் அவர் இலங்கைத் தமிழரசுக் கட்சிப் பாரம்பரியத்தில் வந்த ஒருவர். அப்படிப்பட்ட ஒருவரை வடக்கின் ஆளுநராக ஜனாதிபதி அநுரகுமார நியமித்ததன் மூலம், வடக்கு மக்களின் மனங்களில் தன்மீதான நம்பிக்கையை பல மடங்கு உயர்த்தினார். இதனை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராசா கூட, வேதநாயகனை ஆளுநராக நியமித்தன் மூலம் தேசிய மக்கள் சக்தி வடக்கில் தனது வாக்கு வங்கியை சடுதியாக அதிகரித்தது என்று பல முறை தனது மேடைப்பேச்சுகளில் கோடிட்டுக் காட்டியிருக்கிறார். தமிழ்த் தேசியக் கட்சிகள் நவக்கிரகங்கள் போல ஆளுக்கொரு திசையில் நின்றமை யும், நாடாளுமன்றத் தேர்தலில் அவர்களின் வாக்குவங்கிச் சரிவில் செல்வாக்குச் செலுத்தியது. மக்களின் அடிப்படை பிரச்சினைகளை கைவிட்டு அரசியல் தீர்வு என்ற ஒற்றைப் புள்ளியை மையப்படுத்தி தங்கள் பரப்புரை வியூகங்களை வகுக்க, அடிப்படை பிரச்சினைகளைப் பற்றி பேசிய மருத்துவர் அர்ச்சுனாவும், தேசிய மக்கள் சக்தியினரும் இலகுவாக வெற்றியைப் பெற்றுக் கொண்டனர்.

சமகாலத்தில், இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் நிலவிய சிறீதரன் சுமந்திரன் பனிப்போரும் தாக்கத்தைச் செலுத்தியதையும் ஏற்றுக் கொண்டாகவேண்டும். இதற்கு மேலதிகமாக, கடந்த காலங்களில் சிங்களத் தேசியக் கட்சிகளின் முகவர்களாகக் களமிறங்கிய டக்ளஸ், அங்கஜன் போன்றவர்களை ஆதரித்த தமிழ் மக்களும் இம்முறை தேசிய மக்கள் சக்தியினரை - ஆளும் கட்சியினரை நேரடியாக ஆதரிக்க முடிவு செய்தமையும் செல்வாக்கைச் செலுத்தியது எனலாம். இப்படிப் பல காரணங்கள் ஒன்று சேர்ந்து முகம் அறியாத தேசிய மக்கள் சக்தி வேட்பாளர்களை நாடாளுமன்ற உறுப்பினர்களாகின.

இந்த வெற்றிகளின் பின்னால் மறைமுகக் காரணி ஒன்றும் இழையோடுகின்றது. அதாவது வடக்கின் அரசாங்க உத்தியோகத்தர்களின் தீர்மானம், மக்களிடத்தில் செல்வாக்குச் செலுத்தக் கூடியது. எந்தவொரு தேர்தலிலும், அரசாங்கப் பணியாளர்கள் யாரை ஆதரிக்கின்றனரோ அதே தரப்பையே மக்கள் ஆதரித்திருந்தனர் என்பது வரலாறு. வடக்கில் நடந்த எந்தத் தேர்தலும் இதிலிருந்து விதிவிலக்கானது அல்ல. ஊழல் அரசியல் தலையீடு - தவறிழைத்த அதிகாரிகளுக்கான பதவி உயர்வு என கடந்த அரசாங்கங்களின் காலத்தில் அவர்களுக்கு 'கூஜா' தூக்கியவர்கள் மீதான வெறுப்புணர்வால், கணிசமான அரசாங்க அதிகாரிகள் தேசிய மக்கள் சக்தியை ஆதரித்தது மாத்திரமல்லாது, மக்களையும் ஆதரிக்கத் தூண்டியுமிருந்தனர். வெற்றி பெறுவதைவிட அதைத் தக்க வைப்பது முக்கியம். இந்த இடத்தில்தான் தேசிய மக்கள் சக்தி சறுக்கத் தொடங்குகின்றதா என்று எண்ணத்தோன்றுகின்றது.

முன்னொருபோதும் சாத்தியப்படாத வெற்றியை வடக்கு மக்கள் வழங்கியபோதும், அந்த மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பின்னடிப்பதானது, வெற்றியைக் கொடுத்த வேகத்தில் மக்கள் பிடுங்கி எடுத்துவிடுவார்கள் என்ற அபாயத்தை உணராத செயற்பாடாகவே இருக்கின்றது.

05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எம்மைத் தாக்கும் புற்றுநோய்கள்



## ஒரு சரியான பார்வையும் புரிதலும்

**மருத்துவர் க.குருபரன்**
MBBS, MD
(பெண்நோயியல் மற்றும் மகப்பேற்றியல் மருத்துவ நிபுணர், முதுநிலை விரிவுரையாளர் – மருத்துவ பீடம், யாழ் பல்கலைக்கழகம்)

புற்றுநோய் பற்றிய தவறான தகவல்கள் சமூகத்திலே பரவி உள்ளன. எந்த சிறு உடல்உபாதையையும் புற்றுநோயாக எண்ணி பயப்படுகின்ற மனோநிலை எங்களிடத்தில் அதிகரித்துவிட்டது.

இரு தசாப்தங்களின் முன்னர், நீரிழிவு உயிராபத்தான நோயாக நம்மால் கருதப்பட்டது. மருத்துவ விஞ்ஞான ஆராய்ச்சிகளின் பின்னர் தற்காலத்தில் சிறப்பான சிகிச்சை முறைகள் மூலம் பெருமளவில் நீரிழிவினால் ஏற்படுத்தப்படுகின்ற பல்வேறு பின்விளைவுகள் கட்டுப்படுத்தப்பட்டு ஒரு சாதாரண நோயாக நீரழிவு கருதப்படுகிறது.

அவ்வாறே புற்றுநோயும் மருத்துவ ஆராய்ச்சிகளின் விளைவாக பல்வேறு கண்டுபிடிப்புகள் மற்றும் சிகிச்சை முறைகளினால் அதன் தாக்கம் தற்காலத்தில் கட்டுப்படுத்தப்படுகிறது.

### புற்றுநோய் என்றால் என்ன?

ஒரு வீடு எவ்வாறு செங்கற்களால் அமைக்கப்படுகிறதோ, அவ்வாறே சிறு சிறு கலங்களினால் நமது உடலும் அமைக்கப்படுகிறது. பல்வேறு தொழிற்பாட்டு, பாதுகாப்பு, கட்டமைப்பு அலகுகளினால் நமது உடல் அமைக்கப்பட்டுள்ளது.

சில அங்கங்களில் (உதாரணமாக என்பு மச்சைகள், சனனித் தொகுதி, உணவுக்குடல், ,தோல், வாய்) ஒவ்வொரு நாளும் அதிக அளவில் கலப்பெருக்கம் நிகழும்.

உடலில் எந்தக் கலங்கள் அல்லது தொகுதிகளில் அதிகளவு கலப்பெருக்கம் நிகழ்கிறதோ அவ்வங்கங்கள் புற்று நோய்க்கு இலகுவில் உட்படலாம்.

இதனாலேயே மார்பகப் புற்றுநோய் ,தோல்புற்றுநோய்கள், உணவுக் குடல் புற்றுநோய்கள், குருதிப்புற்றுநோய்கள், சிறுநீர் சனனத் தொகுதியில் ஏற்படுகின்ற புற்றுநோய்கள் அதிக அளவில் எம்மிடையே ஏற்படுகின்றன. புற்றுநோய் மூளை, கடின என்புகளில் அரிதாகவே ஏற்படுகின்றது.

புற்றுநோய் அதன் பேருக்கு ஏற்றவகையில் ஒரு கரையான் புற்று எழுவது போல் விரைவாக பல்கிப் பெருகி வளர்கிறது. பெரும்பாலான புற்றுநோய்கள் குறுகிய காலத்தில் அதிகூடிய பெருக்கம் ஏற்பட்டு பெரிதாக வருகின்றன. அதனால் அந்த அங்கங்களில் சடுதியான மாற்றங்கள் தென்படலாம். சில உடல் மாற்றங்கள், அறிகுறிகள் ஏற்படலாம். உதாரணமாக

- உணவுக்குடலில் ஏற்படுகின்ற புற்றுநோய்கள் இரத்தப்போக்கை ஏற்படுத்தலாம்.
- விரைவாக உடல்நிறை குறையலாம்.
- உடலில் கட்டிகள் தோன்றலாம்.
- உணவில் வெறுப்பு அல்லது விருப்பமின்மை ஏற்படலாம்.
- மார்பகப் புற்றுநோய் கட்டிகளாக அல்லது ஒரு வீக்கமாக வெளிப்படலாம்.
- தோல்புற்று நோய்கள் மாறாத புண்ணாக வெளிப்படலாம்.

நமது உடலை ஒரு கோயிலாகக் கருதி, தினமும் அவதானித்து வந்தால் இவ்வாறான ஆரம்ப அறிகுறிகளை கண்டுபிடிக்கலாம். ஆரம்ப நிலையில் கண்டுபிடிக்கப்பட்டால், எந்தப் புற்றுநோய்க்கும் ஒரு தீர்வு கிடைக்கும்.

### புற்றுநோய் ஏன் ஏற்படுகிறது?

புற்று நோய் என்பது பல்வேறு காரணங்களால் ஏற்படுகின்றது.

• நமது சூழலில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்

சூரியஒளியில் உள்ள சில புற்றுநோயை ஏற்படுத்த வல்ல புற ஊதாக் கதிர்கள் (UV rays) ஒளிக்கதிர்கள்

விவசாய இரசாயனங்கள்

வெப்பநிலை மாற்றங்கள்

பொலித்தீன் பாவனை

• நமது உணவுப்பழக்கத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்

உணவில் சேர்க்கப்படும் சுவை கூட்டிகள்

அதிகளவு கொழுப்புள்ள உணவுகள். அதிகூடிய கொழுப்பு உடலில் சேரும் பொழுது அதனால் ஏற்படுகின்ற இரசாயனமாற்றங்கள் புற்றுநோயை ஏற்படுத்தும்

- பரம்பரை மாற்றப்பட்ட செயற்கையான விவசாய உற்பத்திகள் (genetically modified)
- புற்றுநோய்க் கலங்களில் ஏற்படுகின்ற சடுதியான பரம்பரை அலகு மாற்றங்கள்.
- மிக முக்கியமான குடும்ப உறுப்பினர்களுக்கு புற்றுநோய்கள் இருந்தால் மிக நெருக்கமான குடும்ப உறுப்பினர்களுக்கு அந்தப் புற்றுநோய்கள் ஏற்படலாம்.

  (மார்பக புற்று நோய், குடல் புற்றுநோய் சில சூலகப் புற்றுநோய், கர்ப்பப்பை புற்றுநோய் ).
- உணவில் சேர்க்கின்ற சில இரசாயனங்களும் இவ்வகையில் புற்றுநோயை ஏற்படுத்தக் கூடும்.
- ஒரு குறிப்பிட்ட வகையான புற்றுநோய் மட்டுமே வைரஸ் தொற்றினால் ஏற்படும்.
- உதாரணமாக பெண்களில் ஏற்படுகின்ற கர்ப்பப்பைக் கழுத்துப் புற்றுநோய் மற்றும் மலவாசல் புற்றுநோய் ஆகிய இரண்டும் HPV வைரஸ் தொற்றினால் ஏற்படலாம். அதற்கும் தற்காலத்தில் HPV vaccine தடுப்பூசி மூலம் தீர்வு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

### எப்போது புற்றுநோய் உள்ளதா என்று சந்தேகிக்க வேண்டும்?

நமது உடலில் ஏதாவது அசாதாரண அறிகுறிகள் தென்பட்டால் சந்தேகிக்க வேண்டும்.

• உடலில் கட்டிகள்

• நீண்ட கால மாறாத புண்கள்

• கடும் இரத்தப்போக்கு அல்லது திரவ வெளிப்பாடு இருத்தல்.

சில வேளைகளில் எந்த அறிகுறிகளையும் காட்டாது உடலில் மறைவாக இருந்து நோய் முற்றிய நிலைகளில் சில புற்றுநோய்கள் வெளிப்படலாம். (உதாரணம் :சூலகப் புற்று நோய்). வருடாந்த மருத்துவப் பரிசோதனைகளின் போதே சில புற்று நோய்கள் கண்டுபிடிக்கப்படுவதாகவும் இருக்கலாம்.

இதனால்தான் சுகாதார அமைச்சுகள் /சுகாதாரத் தரப்பினர் ஒரு குறிப்பிட்ட வயதின் பின்னர் தமது மக்களை ஒழுங்கான ஆரோக்கிய பரிசோதனைகளைச் செய்வதற்கு ஊக்குவிக்கின்றனர்.

35 வயதின் பிற்பாடு ஆண்டுக்கு ஒரு முறையாவது நமது உடலில் ஏதாவது பிரச்சினைகள் இருக்கின்றனவா என்பதை நாங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். உதாரணமாக கர்ப்பப்பைக் கழுத்துப் புற்றுநோயை (Cervical cancer) உருவாக முன்னரே கண்டுபிடிப்பதற்காக மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை பரிசோதனை செய்யப்படுகிறது. இதன் மூலம் கர்ப்பப்பைக் கழுத்துப் புற்றுநோயை ஆரம்ப நிலையிலே கண்டுபிடிக்கக் கூடியதாக இருக்கும்.

- நமது பிரதேசத்தில் இவ்வகையான பரிசோதனைகளை எமது மக்கள் பயன்படுத்துவது மிகக் குறைவாக உள்ளது.
- மிக ஆரம்ப நிலையில் கர்ப்பப்பை வாசல் புற்றுநோய் கண்டுபிடிக்கப்பட்டால் அதற்குரிய சிகிச்சையின் விளைவுகள் மிகச் சிறப்பாகவும் பின்விளைவுகளற்றும் இருக்கும்.

உடலில் ஏற்படும் அசாதாரண மாற்றங்களை ஒரு தகுந்த மருத்துவரிடம் காட்டி ஆலோசனை பெற்று அதற்குரிய பரிசோதனைகளைச் செய்வதன் மூலம் புற்றுநோயின் தீவிரத்தையும் அதன் விரும்பத்தகாத விளைவுகளையும் நாங்கள் தவிர்க்கமுடியும்

### எவ்வாறான சிகிச்சை முறைகள் புற்றுநோய்க்கு உள்ளன?

- சத்திரசிகிச்சை, மருந்துகள் மற்றும் கதிர்வீச்சுக்கள் அல்லது எல்லாம் சேர்ந்த சிகிச்சை முறையினாலே புற்றுநோய்க்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது.
- நமது பிரதேசத்திலும் புற்றுநோய்க்குரிய சிகிச்சைகள் தரமாக அளிக்கப்படுகின்றன.
- ஆரம்பநிலைலேயே புற்றுநோய் கண்டுபிடிக்கப்பட்டால், உரிய சிகிச்சைவழங்கினால், புற்றுநோயிலிருந்து மீள முடியும்.
- புற்றுநோய் பிந்திய நேரத்தில் கண்டுபிடிக்கப்படின் வெற்றிகரமாக சிகிச்சை அளிக்க முடியாமல் இருக்கும்.

புற்றுநோயை ஆரம்பத்தில் கண்டுபிடித்து அதற்குரிய சிகிச்சையை அளிப்பதன் மூலம் ஒரு புற்றுநோயினால் பாதிக்கப்படாத அல்லது பாதிப்புக் குறைந்த சமுதாயமாக நாங்கள் மாறலாம்.

எந்த நோயாக இருந்தாலும் வருமுன் காப்போம் என்பது மிகச் சிறந்த ஒரு பொன் மொழியாகும். ஆரம்ப நிலையில் கண்டுபிடித்து அதற்குரிய சிகிச்சைகளை அளிப்பதன் மூலம் நாம் புற்று நோயை இலகுவில் வெற்றி கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணமே உனது பசி எது? தாகம் எது?

நிலாந்தன்



அண்மையில் பலாலி வீதியில் பல்கலைக்கழகத்தில் இருந்து நடந்துபோகக்கூடிய தூரத்தில் ஓர் உயர்தர உணவகம் திறக்கப்பட்டது. அதற்குச் சில கிழமைகளுக்கு முன்பு அதே பலாலி வீதியில் மற்றொரு உயர்தர இந்திய உணவகமொன்று திறக்கப்பட்டது. முன்சொன்ன உணவகத்தில் இருந்து நடந்துபோகக்கூடிய தூரத்தில் இந்த உணவகம் உண்டு. இந்த இரண்டு உணவகங்களும் திறக்கப்படுவதற்கு இடைப்பட்ட காலகட்டத்தில் யாழ்ப்பாணம் நகரத்தின் மையத்தில் முன்பு வெலிங்டன் தியேட்டர் அமைந்திருந்த வளவிற்குள் பேரங்காடியொன்றும் திறக்கப்பட்டது. திறக்கப்பட்ட நாளிலிருந்து இரவும்பகலும் நூற்றுக்கணக்கானவர்கள் அங்கு குவிகிறார்கள்.

ஏற்கனவே யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் இருந்து நடந்து போகக்கூடிய தூரத்தில் ஆஸ்பத்திரி வீதியில், வேம்படிச் சந்திக்கு அருகாக உள்ள சூழலில் உயர்தர உணவகங்கள் பல திறக்கப்பட்டுள்ளன. பீட்சாக் கடைகளில் இருந்து பிரியாணிக் கடைகள்வரை பல்வேறு வகைப்பட்ட உணவகங்கள் மிகக்குறுகிய தூர இடைவெளிக்குள் உள்ளன.

இந்த உணவகங்கள் தவிர இவற்றுக்கு முன்னரே திறக்கப்பட்ட உயர்தர விருந்தினர் விடுதிகள் உள்ளன. அங்கேயும் இரவில் நூற்றுக்கணக்கானவர்களைக் காணமுடியும். அவரவர் நுகர்வுக் கொள்ளளவுக்கு ஏற்ப உணவகங்களை நாடிச் செல்கிறார்கள்.

ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னரான தமிழ்ச் சமூகத்தில் நுகர்வுத் தாகம் அதிகரித்துவருவதை; ஒரு நுகர்வு அலை எழுந்திருப்பதை பல ஆண்டுகளுக்கு முன்னரே அவதானிக்கக் கூடியதாக இருந்தது. கடந்த 15 ஆண்டுகளிலும் அந்த நுகர்வுப் பசியும் தாகமும் அதிகரித்துச் செல்கின்றன. போரினால் மூடப்பட்டிருந்த ஒரு சமூகம் வெளியுலகத்துக்குத் திறந்துவிடப்படுகையில் நுகர்வுத்தாகமும் பசியும் அதிகமாக இருக்கும். புலம்பெயர்ந்த தமிழர்களின் நிதியுதவிகள் மட்டும் இதற்குக் காரணமல்ல. ஆயுத மோதலுக்கு பின்னர் தமிழ்மக்கள் தமது வாழ்க்கையைப் படிப்படியாகக் கட்டியெழுப்பிவருகிறார்கள் என்பதன் குறிகாட்டிகளில் ஒன்றாக மேற்படி உயர்தர உணவகங்களின் பெருக்கத்தைக் கூறலாம். ஒரு மாற்றத்திற்காக வெளியில் போய்ச் சாப்பிட விரும்புகிறவர்கள்; அல்லது வித்தியாசமாகச் சாப்பிட விரும்புகிறவர்கள்;அல்லது கூடியிருந்து சாப்பிடுவதைக் கொண்டாட விரும்புகிறவர்கள் அவ்வாறு உயர்தர விருந்தகங்களை நோக்கிப் போகிறார்கள். வசதிபடைத்த மேல்நடுத்தர வர்க்கத்தினர் மட்டுமல்லஅன்றாடம் உழைப்பவர்கள் அதிகமுடைய கிராமங்களிலும்கூட இரவு உணவுக்காக பேக்கரிகளில் தங்கியிருக்கும் ஒரு நிலையைக் காணலாம். உதாரணமாக, சில ஆண்டுகளுக்கு முன்பு உரும்பிராயில் கிராமிய உழைப்பாளர் சங்கத்தின் ஸ்தாபகருடைய நினைவு தினத்தைக் கொண்டாடுவதற்காக போயிருந்தோம். பெருமளவிற்கு அன்றாடம் உழைப்பவர்களைக் கொண்ட ஒரு கிராமம் அது. நாங்கள் அங்கேயிருந்த சுமார் 5 மணித்தியால காலப்பகுதிக்குள் 8 பேக்கரி வாகனங்கள் அப்பகுதிக்குள் வந்துபோயின. அவற்றுள் சில ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் வந்தன. அந்தக் கிராமத்தவர் ஒருவரிடம் கேட்டேன், "இவ்வளவு அதிக தொகையாக பேக்கரி வாகனங்கள் வருகின்றனவே அந்த அளவுக்கு நுகர்வு உண்டா? " என்று. அவர் சொன்னார் "ஓம் பெருமளவுக்கு உடல் உழைப்பாளிகளாகிய எமது கிராமத்தவர்கள் இரவுகளில் ஆறுதலாக இருக்க விரும்புகிறார்கள். இரவில் சமைப்பதைவிடவும் இந்த பேக்கரி உணவுகளை வாங்கினால் பெண்கள் ஆறுதலாக இருந்து திரைத்தொடர்களைப் பார்க்கலாம்" என்று சொன்னார். சமையல், பெண்களுக்கு மட்டுமே விதிக்கப்பட்ட ஒரு கடமை என்று கருதும் ஒரு சமூகத்தில் இவ்வாறு விருந்தகங்களுக்குப் போவதன் மூலம் பெண்களுக்கு ஆறுதல் கிடைக்கும். பொதுவாக கிழமைக்கு ஒரு நாளிலாவது அல்லது ஒரு நாளில் ஒரு வேளையாவது சமையாமல் இருப்பதை பெண்கள் பெருமளவுக்கு ஆறுதலாகக் கருதுகிறார்கள்.

எனினும் இவ்வாறு உணவைக் கூடியிருந்து சாப்பிடுவதை ஒரு கொண்டாட்டமாகக் கருதும் பலரும், உயர்தர உணவகங்களில் உணவுக்கு ஓர்டர் கொடுத்துவிட்டு, மேசையைச் சுற்றியிருந்து அவரவர் அவரவருடைய கைபேசியை நோண்டிக் கொண்டிருப்பதைக் கண்டிருக்கிறேன். ஒன்றாக உட்கார்ந்து உணவைச் சுவைப்பது ஒரு கொண்டாட்டம். அந்தக் கொண்டாட்டத்துக்குள்ளும் கைபேசி ?

மேற்சொன்ன உயர்தர உணவகங்களில் ஒரு தொகுதி கோர்ப்பரேட் வலைப்பின்னலுக்குள் வருபவை. கோர்ப்பரேட் உணவகங்கள் உலகப் பொதுவான கோர்ப்பரேட் சுவையைப் பரப்புகின்றன. யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் சனாதனன் கூறுவார் 'எல்லா பேரங்காடிகளுக்கும் ஒரே மொழிதான்' என்று. அங்குள்ள தட்பவெட்பம், அங்கு மென்மையாகத் தவழும் இசை, சமைக்கப்படும் பேர்கர் முறுக்கும் வாசம் போன்ற எல்லாமும் உலகின் எல்லாப் பேரங்காடிகளுக்கும் ஒரே மாதிரியானவைதான். அப்படித்தான் கோர்ப்பரேட் உணவகங்களும் உலகப் பொதுச் சுவையைப் பரப்புகின்றன.

**ஆனால் இதனால் உள்ளூர்ச் சாப்பாட்டுக் கடைகள் பெரிய அளவில் பாதிக்கப்படுகின்றன என்று கூறமுடியாது. ஏனென்றால் உள்ளூர்ச் சாப்பாட்டுக் கடைகளில் வழமையாக உணவு அருந்துபவர்கள் எப்பொழுதும் அங்கே போவார்கள்.** ஒரு குறிப்பிட்ட பிரிவினர்தான் உயர்தர உணவகங்களை நோக்கியும் குறிப்பிட்ட சில பேரங்காடிகளை நோக்கியும் போகிறார்கள்.

உயர்தர உணவகங்களில் பிரியாணி வகை உணவைச் சாப்பிடுவது என்பது ஓர் அந்தஸ்தை, சமூகத் தராதரத்தை காட்டும் விடயம் என்று கனடாவில் வசிக்கும் கீதா சுகுமாரன் கூறுகிறார். அவர் உணவுப் பண்பாட்டை தனது கலாநிதிப்பட்ட ஆய்வுப் பொருளாக எடுத்துக்கொண்டவர். பிரியாணி என்பது எல்லா விதமான பொருள்களும் கலந்து சமைக்கப்படும் ஓர் உணவு. விருந்துகளில் அது அந்தஸ்தைக் குறிப்பது. பிரியாணிக் கடைகளில் சாப்பிடுவதை ஒரு சமூக அந்தஸ்தாகக் கருதும் ஒரு பிரிவினர் அங்கே போகிறார்கள் என்றும் அவர் கூறுகிறார்.

ஆனால், அதனால் உள்நாட்டுச் சுவையும் உள்நாட்டு உணவும் கைவிடப்படுகின்றதா? இல்லை. அவ்வாறெல்லாம் ஏங்கத் தேவையில்லை. வீடுகளில் இப்பொழுதும் உள்நாட்டுச் சமையல்தான். உள்ளூர் சுவைதான். ஒரு வித்தியாசத்துக்காக, ஒரு மாற்றத்திற்காக அல்லது தமது அந்தஸ்தைக் காட்டுவதற்காக பிரியாணிக் கடைக்கு போகின்றவர்கள் வாழ்க்கை முழுவதும் பிரியாணிக் கடைகளிலேயே சாப்பிடுவதில்லை. அவ்வாறு தினசரி பிரியாணி சாப்பிடுகிறவர்கள் யாழ்ப்பாணத்தில் அந்தக் கடைகளில் இருந்து குறுகிய தொலைவில் காணப்படும் தனியார் ஆஸ்பத்திரிகளில் தங்களுடைய கொலஸ்ட்ரோலைக் கரைப்பதற்கான சிகிச்சைகளையும் பெறுகிறார்கள். அதாவது ஒரு கோர்ப்பரேட் கொலஸ்ட்ரோலை விற்கிறார். ஒரு கோர்ப்பரேட் கொலஸ்ட்ரோலைக் கரைக்கிறார். ஆக மொத்தம் கோர்ப்பரேட்களின் ஆய்வுகூடமாக மாற்றப்பட்ட உள்ளூர் உடல் ?

கோர்ப்பரேட் சுவை என்பது உலகப் பொதுவானது. உள்ளூர்ச் சுவை என்பது அதிகம் தேசியத்தன்மை மிக்கது. ஒரு மக்கள் கூட்டத்தை ஒரு தேசமாக வனையும் அம்சங்களில் ஒன்று பொதுப் பண்பாடு. பொதுப் பண்பாட்டுக்குள் உணவுப்பண்பாடும் அடங்கும். எனவே உணவுப் பண்பாடானது ஒரு மக்கள் கூட்டத்தின் தேசியத் தனித்துவங்களில் ஒன்றாகக் கருதத்தக்கது. 1966இல் மேதினத்தன்று இடதுசாரிகள் தமிழ்மக்களுக்கு எதிராக எழுப்பிய கோஷத்தை இங்கு சுட்டிக்காட்டலாம். "தோசே மசால வடே அப்பிட்ட எப்பா". (தோசையும் மசாலா வடையும் எங்களுக்கு வேண்டாம்) இது தமிழர்களைஅவர்களுடைய உணவுக்கூடாக விழித்த ஒரு கோஷம். அதாவது தோசையும் வடையும் அங்கே தமிழ் மக்களின் குறியீடாகப் பயன்படுத்தப்பட்டன.

**ஈழத் தமிழர்கள் மத்தியில் வடக்கிலும் கிழக்கிலும் வித்தியாசமான உணவுப்பண்பாடுகள் உள்ளன. வடக்கில் யாழ்ப்பாணத்துக்கும் [illegible] யாழ்ப்பா**ணத்திலேயே வடமாராட்சி, தீவுப்பகுதிக்கிடையே வித்தியாசமான உள்ளூர் உணவுப்பண்பாடுகள் உள்ளன. ஒரு தேசிய இனத்தின் உள்ளூர் உணவு பண்பாட்டுக்குள்ளேயே பல வகைகள் உள்ளன. அவை ஏக பரிமாணத்தைக் கொண்டவை அல்ல. இந்தப் பல்வகைமையின் திரட்சிதான் ஈழத் தமிழர்களுடைய பொதுவான உணவுப் பண்பாடாகும். உலகில் தூய உணவுப்பண்பாடு என்று ஒன்று கிடையாது என்று கீதா சுகுமாரன் கூறுகிறார். எல்லா உள்ளூர் உணவுப்பண்பாடுகளும் கொண்டும் கொடுத்தும் வளர்ந்தவைதான். இந்த விளக்கத்தின் பின்னணியில் வைத்தே கோர்ப்பரேட் உணவுப்பண்பாட்டையும், உள்ளூர், தேசியத் தனித்துவம்மிக்க உணவுப் பண்பாடுகளையும் பார்க்க வேண்டும்.

ஆயுத மோதல்களுக்கு பின்னரான நுகர்வுப் பசி, தாகம் என்பவற்றின் பின்னணியில் ஒரு தேசமாகத் திரள்வதன் மூலம் மட்டுமே தனது அரசியல் உரிமைகளை வென்றெடுக்கவேண்டிய தமிழ்ச் சமூகமானது, தனித்துவம்மிக்க தனது சொந்தச் சுவையைக் குறைத்து மதிப்பிட்டு, அதை லோக்கலானது" என்று இகழ்ந்துவிட்டு, கோர்ப்பரேட் சுவை மீது பசி தாகமுடையதாக மாறிவிடுமா ?

கோர்ப்பரேட் உணவகங்களின் பெருக்கத்தின் மத்தியில் உள்ளூர்த் தனித்துவங்களைப் பாதுகாப்பதை ஒரு வாழ்க்கை முறையாக, பெருமைக்குரிய வாழ்க்கை முறையாகக் கட்டமைப்பது என்பது ஒரு சமூகத்தின் அரசியல் சமூக பண்பாட்டுத் தலைமைத்துவங்களின் வேலை. அது தொடர்பாக அந்த சமூகத்தின் தேசியவாத அரசியலை முன்னெடுக்கும் தரப்புக்கள் மத்தியில் பொருத்தமான விழிப்பும் தூரநோக்கிலான அரசியல் தரிசனங்களும் இருக்கவேண்டும். துறைசார் அறிஞர்கள் இது தொடர்பான கற்கைகளை காஸ்ரோ நஷனலிஸம் (Gastronationalism) என்று அழைக்கிறார்கள். ஈழத்தமிழர்கள் புலப்பெயர்ச்சி காரணமாக ஏற்கனவே உலகமயப்பட்டுவிட்டார்கள். தாங்கள் உலகமயப்பட்டு விட்டதாகக் காட்டிக்கொள்வதை ஒரு பகுதியினர் பெருமையாகவும் கருதுகிறார்கள்.

தமிழ்மக்கள் பண்பாட்டுச் செழிப்புமிக்க ஒரு நடுத்தரவர்க்கத்தைக் கொண்டவர்கள். பண்பாட்டுச் செழிப்புமிக்க ஒரு சமூகம் தனது தனித்துவங்களை 'லோக்கல்' ஆனவை என்று இகழ்ந்து எதிர்ப்பின்றி உலகப் பொதுப் பண்பாட்டுக்குள் கரைந்துவிடாது. ஆனால் ஒரு சமூகத்தை தோற்கடிக்க விரும்பும் சக்திகள் அந்தச் சமூகத்தின் பண்பாட்டுத் தனித்துவத்தையும் செழிப்பையும் அதைவிட பலமான ஒரு பண்பாட்டுக்குள் கரைத்துவிட முயற்சிக்கும். எனவே அதை எதிர்கொள்வதற்கான சமூக, அரசியல், பொருளாதார, பண்பாட்டு விழிப்பு என்பது கலெக்டிவ் ஆனது. அரசியல் தலைமைகளால் முன்னெடுக்கப்படவேண்டியது. கோர்ப்பரேட் சுவையைப் பரப்பும் உயர்தர உணவகங்களுக்கு நிகராக உள்ளூர்ச் சுவையை, உள்ளூரில் தனித்துவமான உணவுப் பண்டங்களை உலகத் தரத்துக்கு உற்பத்தி செய்வதற்கு தமிழ் மக்களிடம் வளம் இல்லையா? உள்ளூர் நண்டுக்கறி, உள்ளூர் றால்கறி, உள்ளூர் பிரட்டல், உள்ளூர் பொரியல், உள்ளூர் சுண்டல், உள்ளூர் கீரை, உள்ளூர் ஒடியல் கூழ், உள்ளூர் பலகாரம்... என்று தமிழ் மக்களின் தேசிய தனித்துவங்களை வெளிப்படுத்தும் உணவுச் சாலைகளை கட்டியெழுப்ப உள்ளூரிலும் புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியிலும் உள்ள முதலீட்டாளர்கள் முன்வரவேண்டும். சூழலியலாளர்கள் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டுவார்கள். உள்ளூர் மரங்களில்தான் பறவைகள் கூடுகட்டும். பூச்சி புழுக்களும் அந்த மரங்களைத்தான் மொய்க்கும். அவற்றுக்குத் தெரிகிறது. உள்ளூர் மரம் எது, "ஹைபிரிட்" மரம் எது, என்று. பண்பாட்டுச் செழிப்பு மிக்க தமிழ் மக்களுக்கும் அது தெரியும். தமது சுவை எது . கோர்ப்பரேட் சுவை எது என்பது. பண்பாட்டு விழிப்பில்லாமல் தேசிய விழிப்பு இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யாவுக்கும்



# அப்படியென

# வாய்க்கால் ச

ரினோஸா

வெள்ளை மாளிகையில் ட்ரம்ப் ஜெலன்ஸ்கி சந்திப்பு காரசார விவாதத்துடன் முடிந்து, பேச்சுவார்த்தையில் இருந்து ஜெலன்ஸ்கி வெளியேற்றப்பட்ட நிலையில் பட்டி தொட்டி வரை இது தான் இப்போது பரபரப்பாகப் பேசப்படும் விடயம்.

அதன் தொடர்ச்சியாக உலக அரசியலில் என்ன தாக்கங்கள் ஏற்படும்? ஜெலன்ஸ்கியை அவமானப்பட்டுத்தி ட்ரம்ப் வெளியேற்றியது சரியா? என்பதையெல்லாம் ஆராயும் முன் இந்தப் பிரச்சினையின் ஆணி வேர் என்ன என்பதைத் தெரிந்துகொண்டால்தான் தெளிவான பார்வையோடு அணுக முடியும். அப்போது தான் உங்களால் ரஷ்யாவையும் புடினையும்கூட புரிந்துகொள்ள முடியும்!

**சரி, இந்தப் போர் எதற்காக?**

உக்ரைனுக்கு சொந்தமான நிலப்பரப்பை ரஷ்யா அடாவடியாக ஆக்கிரமிப்பு செய்யப் பார்க்கிறது. அதை தடுக்கும் உக்ரைனோடு சண்டை செய்கிறது. இது தான் உண்மையா? இல்லை இது தான் நமக்கு சொல்லப்படும் செய்தியா?

ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையிலான போர், பல நூற்றாண்டுகளாக நீடிக்கும் சிக்கலான வரலாற்று உறவுகளின் விளைவு. இந்தப் போரின் வேர்களைப் புரிந்து கொள்ள, நாம் பல முக்கியமான வரலாற்று நிகழ்வுகளையும், அரசியல் மாற்றங்களையும் முதலில் ஆராய வேண்டும். இவை எல்லாவற்றையும் தெரிந்து கொள்ள முதலில் வரலாற்றின் 1200 ஆண்டுகள் கொஞ்சம் பின்னோக்கி செல்லலாம்.. உக்ரைன், ரஷ்யா மற்றும் பெலாரஸ் ஆகிய மூன்று அயல் நாடுகளும் இன்றைக்கு சுமார் 1,200 ஆண்டுகளுக்கு முன்பு கிழக்கு ஐரோப்பாவின் டினீப்பர் ஆற்றின் நதிக்கரையில் பிறந்த ஒரு தாய் வயிற்றுச் சகோதரர்கள். கியிவன் ரஸ்(Kyivan Rus)என்று அழைக்கப்பட்ட இந்த காலப்பகுதியே இந்த இரு நாடுகளின் பொதுவான வரலாற்றுத் தொடக்கம். ஆனால் மனித வரலாற்றிலேயே சொந்தக்காரனோடும் பக்கத்து வீட்டுக்காரனோடும் சுமுகமாக வாழ்ந்ததாக சரித்திரமே இல்லையே... அதற்கு இவர்கள் மட்டும் விதி விலக்கா என்ன? ஆக இவர்களுக்குள்ளும் மோதல் வந்தது.

**எப்படி? யாரால்?**

உக்ரைனில் ஏற்பட்ட மங்கோலிய ஆக்கிரமிப்பு மற்றும் லிதுவேனியன், போலந்து போன்ற நாடுகளின் ஆதிக்கம் உக்ரைனை ரஷ்யாவிலிருந்து மெல்ல வேறுபடுத்தியது. அதன் பிறகு 1820 ஆம் நூற்றாண்டுகளில் எழுச்சியுற்ற ரஷ்யப் பேரரசு, உக்ரைனை 'எம் மண், எம் மக்கள்'என்று ரஷ்யப் பேரரசின் ஒரு பகுதியாகவே பார்த்தது. ஆனாலும் ஏற்கனவே வெளியுலகின் ஆக்கிரமிப்புகளால் மூளைச் சலவை செய்யப்பட்டு இருந்த உக்ரைனியர்கள் மத்தியில் ரஷ்யப் பேரரசின் ஆதிக்கம் உக்ரைனிய தேசியவாதத்தை தூண்டியது.

காலப்போக்கில் ரஷ்யர்களும் உக்ரைனியர்களும் மொழி ரீதியாகவும், வரலாற்று ரீதியாகவும், மிக முக்கியமாக, அரசியல் ரீதியாகவும் பிளவுற்றனர். அதற்கடுத்தபடியாக, அதுவரை ஒற்றை சாம்ராஜ்யமாக இருந்த சோவியத் பிளவுற்றது.

டிசம்பர் 1991இல் உக்ரைன், ரஷ்யா மற்றும் பெலரஸ் ஆகிய மூன்று நாடுகளும் Belovezh எனும் ஒரு வரலாற்று சிறப்புமிக்க ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. அந்த ஒப்பந்தம் சோவியத் ஒன்றியம் இனி இல்லை என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டு, அதற்கு பதிலாக Commonwealth of Independent States (CIS) எனும் புதிய அமைப்பை உருவாக்கியது. என்னதான் சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்டாலும், அந்தப் பிராந்தியத்தில் தனது செல்வாக்கைத் தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ள ரஷ்யா ஆர்வமாக இருந்தது. இதற்காக, புதிதாக உருவாக்கப்பட்ட Commonwealth of Independent States (CIS)ஐ ஒரு கருவியாகக் கையாண்டது. இந்த அரசியல் சதுரங்கத்தில் ரஷ்யாவும் பெலாரஸும் நெருங்கிய கூட்டணியாக உருவாக, உக்ரைன் மேற்குலகம் நோக்கித் திரும்பியது.

அப்போது தான் இரு நாடுகளின் நட்பில் முதல் விரிசல் உருவானது. உக்ரைனை ஐரோப்பிய ஒன்றியத்தோடு ஒருங்கிணைக்கும் நோக்கம் மேற்கு நாடுகளுக்கு இல்லாததால் இது பற்றி ரஷ்யா அந்தச் சமயத்தில் பெரிதாக எதையும் அலட்டிக்கொள்ளவில்லை.

1997 இல், ரஷ்யாவும் உக்ரைனும் ' ஒரு நட்பு, ஒத்துழைப்பு மற்றும் கூட்டு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டன. இந்த ஒப்பந்தத்தின் மூலம், மொஸ்கோ உக்ரைனின் அதிகாரபூர்வ எல்லைகளை வரையறுத்ததை தொடர்ந்து நிலமை மீண்டும் சுமுகமானது. ஆனால், 2003 இல் உக்ரைனின் துஸ்லா தீவுக்கு அருகிலுள்ள கெர்ச் ஜல சந்தியில் ரஷ்யா திடீரென ஓர் அணையைக் கட்டத் தொடங்கிய போது இரு தரப்புக்கும் இடையே முதலாவது மிகப் பெரிய ராஜதந்திரப் பிளவு ஏற்பட்டது. ஏற்கனவே ஒப்புக்கொண்ட தேசிய எல்லைகளை மீண்டும் வரைவதற்கான ரஷ்யாவின் ஒரு முயற்சியாக இது உக்ரைனுக்குத் தோன்றியது. ஆனால் அந்தப் பிணக்கும் இரு அதிபர்களும் நேருக்கு நேர் சந்தித்துப் பேசி சுமுகமாகத் தீர்க்கப்பட்டது. அணையின் கட்டுமானப் பணி நிறுத்தப்பட்டாலும் இரு தரப்புக்கும் இடையேயான நட்பில் ஏற்பட்ட விரிசல்கள் அப்போது முதல் மெல்ல மெல்ல விரிவடையத் தொடங்கின.

********

இப்படி மாற்றி மாற்றி இவர்கள் இருவரும் சண்டை போட்டுக்கொண்டு இருந்த போது இதை எல்லாம் மேலே இருந்து பார்த்துக்கொண்டு இருந்த ஒருவனுக்கு மூக்கு வேர்த்தது. ஏற்கனவே ரஷ்யா தனக்கு நிகரான 'சூப்பர் பவராக ' உருவெடுத்து விடுமோ என்ற கலக்கத்துடன் இருந்த அமெரிக்கா எனும் கூத்தாடிக்கு, இப்படி இருநாடுகளும் இரண்டுபட்டமை கொண்டாட்டமானது. எப்படி ரஷ்யாவை நெருங்கலாம் என்று கண்ணில் விளக்கெண்ணெய் ஊற்றி பார்த்துக் கொண்டிருந்த அமெரிக்காவுக்கு இதுதான் சரியான சந்தர்ப்பம் எனத் தோன்றியது. காரணம் நேரடியாக ரஷ்யாவுக்குள் ஊடுருவது என்பது சத்தியமே இல்லாத விடயம். ஆக, அதன் அண்டை நாடுகளின் ஊடாக ரஷ்யாவை நெருங்குவது தான் அவர்களுக்கு இருந்த ஒரே வழி. எனவே 2008ல் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் இந்தச் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டார்.

அதற்கு அவர் கையிலெடுத்த ஆயுதம் 'நேட்டோ!'

உக்ரைன் ஏற்கனவே கேட்டுக்கொண்ட 'நேட்டோ' அங்கத்துவத்தை வழங்க அமெரிக்கா முடிவு செய்தது.

ரஷ்யா தனது மேற்கு எல்லையில் நேட்டோ பலத்துடன் சுயாதீன ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் வருவதை விரும்பவில்லை. ஏற்கனவே லிதுவேனியா, போலந்து, எஸ்டோனியா போன்ற ரஷ்யாவின் அண்டை நாடுகள் நேட்டோவில் இணைந்ததன் மூலம் அமெரிக்கா, ரஷ்யாவை மிகவும் நெருங்கியது. எனவே, ரஷ்யா தனது எல்லைகளில் நேட்டோ விரிவாக்கத்தை ஒரு மிகப்பெரும் அச்சுறுத்தலாகக் கருதியது. ஆனால் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் எதிர்ப்பையும் மீறி, உக்ரைன் மற்றும் ஜோர்ஜியாவை நேட்டோவில் இணைப்பதற்கான செயல்முறையைத் தொடங்கியது அமெரிக்கா.

உக்ரைன் போன்ற ஒரு சிறு நாட்டை தன் வசப்படுத்துவது அமெரிக்காவின் திட்டம் இல்லை என்றாலும் சிறு மீனைப் போட்டு பெரிய மீனைப்பிடிக்கும் கதையாக உக்ரைன் ஊடாக ரஷ்யாவை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரலாம் என்பது அமெரிக்காவின் மறைமுகத் திட்டமாக இருந்தது. ஆண்டாண்டு காலமாக இருந்து வந்த மரபுப்படி ரஷ்யர்களும் உக்ரேனியர்களும், 'ஒரு தாய் மக்கள்' என்றும், அவை 'ரஷ்ய நாகரிகத்தின்' ஒரு பகுதி என்றும் புடின் மீண்டும் மீண்டும் கூறி வந்தாலும் மேற்கத்தைய உலகால் மூளைச் சலவை செய்யப்பட்டு கடிவாளம் கட்டப்பட்ட குதிரைகளாக மாறி இருந்த உக்ரைனியர்களால் அவரது கூற்றை ஏற்க முடியவில்லை.

> **உக்ரைன் போன்ற ஒரு சிறு நாட்டை தன் வசப்படுத்துவது அமெரிக்காவின் திட்டம் இல்லை என்றாலும் சிறு மீனைப் போட்டு பெரிய மீனைப் பிடிக்கும் கதையாக உக்ரைன் ஊடாக ரஷ்யாவை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரலாம் என்பது அமெரிக்காவின் மறைமுகத் திட்டமாக இருந்தது.**

ஆனால் அப்போது ரஷ்யாவுடன் நெருக்கமாக இருந்த உக்ரைனிய ஜனாதிபதி யானுகோவிச் ஐரோப்பிய ஒன்றிய ஒப்பந்தம், உக்ரைனின் பொருளாதாரத்துக்கு நீண்டகாலப் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும், ஐரோப்பிய ஒன்றியத்தின் தரத்திற்கு ஏற்ப உக்ரைன் தனது தொழில்களை மாற்றியமைக்க வேண்டியிருக்கும் என்றும், அது உக்ரைனின் தொழில் துறையை பெரிதளவில் பாதிக்கும் என்றும் புரிந்து கொண்டார். அதே போல ரஷ்யாவுடன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உக்ரைனுக்கும்



# யென்ன சண்டை?



நெருக்கமாக இருந்தால், உக்ரைனுக்கு பொருளாதார ரீதியாக அதிக நன்மை கிடைக்கும் என்றும் நம்பினார். முக்கியமாக ஐரோப்பிய ஒன்றிய ஒப்பந்தம், உக்ரைனில் மேற்கத்திய செல்வாக்கை அதிகரிக்கும் என்ற சரியான காரணத்தைப் புரிந்து கொண்டார்.

ஐரோப்பிய ஒன்றியத்துடனான பொருளாதார ஒருங்கிணைப்பு ஒப்பந்தத்தை உக்ரைனிய ஜனாதிபதி விக்டர் யானுகோவிச் நிராகரித்ததைத் தொடர்ந்து நவம்பர் 2013இல் தலைநகர் கியூவில் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் தொடங்கின. அப்போது வெடித்த கலகம், அவரைப் பதவியேற்க விடாமல் தடுத்து மேற்கத்திய கொத்தடிமையான விக்டர் யுஷ்செங்கோவை ஜனாதிபதியாக்கியது.

### இப்போது பந்து அமெரிக்கா கையில்!

உடனே சுதாகரித்துக்கொண்ட ரஷ்யா , மார்ச் 2014இல் உக்ரைனின் கிரிமியன் பிராந்தியத்தின் மொத்தக் கட்டுப்பாட்டையும் தன்கைவசம் எடுத்துக் கொண்டது. ரஷ்யாவின் ஆர்டிக் பிராந்தியக் கடற்பரப்பை வருடத்தில் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் மட்டுமே போக்குவரத்துக்குப் பயன்படுத்த முடியும். ஏனைய நாள்களில் உறைபனி காரணமாக அந்தப்பகுதியிலுள்ள துறை முகங்கள் யாவும் மூடப்பட்டுவிடும். அதேபோல உக்ரைன் வசமுள்ள கிரிமியன் பிராந்தியத்தின் கடற்பரப்பு ரஷ்யா வசம் இருக்கும் வரை தனது நாட்டின் பாதுகாப்புக்குப் பெரியளவில் அச்சுறுத்தல் இல்லை என்பதும் கிரிமியன் பிராந்தியத்தை ரஷ்யா கைப்பற்ற முக்கியமான காரணம்.

பழைய சோவியத் ஒன்றியத்தின் ஒரு பகுதியாக, ரஷ்யாவுக்கு அடுத்தபடியான இரண்டாவது சக்தி வாய்ந்த சோவியத் குடியரசாக உக்ரைன் இருந்து வருகிறது. மூலோபாய ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், கலாசார ரீதியாகவும் ரஷ்யாவுக்கு உக்ரைன் முக்கியமானது. சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு, மேற்கு நாடுகளுடனான போட்டியில் அதிகார சமநிலையை தக்கவைத்துக் கொள்வதற்காக ரஷ்யாவுக்கு உக்ரைனைத் தன் வசம் வைத்திருப்பது கட்டாயமானது. ஏனெனில் கிழக்கு ஐரோப்பாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் உக்ரைன் அமைந்திருப்பது புவியியல் ரீதியாகவும் ரஷ்யாவுக்கு முக்கியத்து வம் பெறுகிறது.

உக்ரைனிய மக்கள் தொகையில் குறைந்தது மூன்றில் ஒரு பகுதியினர், பெரும்பாலும் ரஷ்ய எல்லைக்கு அருகில் உள்ள நாட்டின் கிழக்குப் பகுதியில் வசிக்கிறார்கள். அவர்கள் ரஷ்ய மொழியையே பேசுகிறார்கள். ரஷ்யா இந்தப் பகுதிகளில் உள்ள ரஷ்ய மொழி பேசும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்பதிலும் உறுதியாக உள்ளது. சோவியத்தின் வீழ்ச்சிக்குப் பின் பல பால்டிக் நாடுகளை ஐரோப்பிய ஒன்றியத்திடம் ரஷ்யா பறிகொடுத்தது. ஒரு காலத்தில் முன்னணி சக்தியாக இருந்த மொஸ்கோ இதன் காரணமாக அதன் செல்வாக்கை கணிசமாக இழந்தது. இதுவும் உக்ரைனை மேற்கு நாடுகளுக்கு விட்டுக்கொடுக்க முடியாது என்று ரஷ்யா அடம்பிடிப்பதற்கான ஒரு காரணம். ஆக மொத்தத்தில், ஒரு ஜனநாயக அரசு என்ற பெயரில் மேற்கத்திய கூட்டணியை நோக்கிய உக்ரைனின் நகர்வை ,ரஷ்யா தனக்கான அச்சுறுத்தலாகவும், ஒரு பெரும் துரோகமாகவும் பார்த்தது. உக்ரைனின் ரஷ்ய எல்லைகளில் அமெரிக்கா தன் படைகளை குவித்தது. தங்கள் ஏவுகணைகளை நிறுவியது.

"நாங்கள் எங்கள் ஏவுகணைகளை அமெரிக்காவின் எல்லையில் நிலை நிறுத்த வில்லை. அப்படியிருக்க அமெரிக்கா மட்டும் ஏன் தனது ஏவுகணைகளை எங்கள் எல்லைக்கு அருகில் நிலைநிறுத்துகிறது? கனடாவுக்கும் அல்லது மெக்சிகோவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான எல்லைக்கு வந்து எங்கள் சொந்த ஏவுகணைகளை அங்கு நிலைநிறுத்த நாங்கள் முடிவு செய்தால் அமெரிக்கர்கள் சும்மா இருப்பார்களா?" என்ற புடினின் நியாயமான கேள்விக்கு மேற்குலகிடம் பதில் இருக்கவில்லை.

1990ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையில், நேட்டோ ஐரோப்பாவில் கிழக்கு நோக்கி விரிவடையாது என்று ஒப்புக்கொண்டதை மீறி, ரஷ்யாவை முட்டாளாக்கி அதன் எல்லைகளை விரிவுபடுத்திக் கொண்டே போவது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று என்று கூறிய புடின், "நீங்கள் எங்களிடமிருந்து உக்ரைன் மீது படையெடுக்க மாட்டோம் என்ற உத்தரவாதங்களைக் கோருகிறீர்கள். உண்மையில் நீங்கள்தான் எங்களுக்கு உத்தரவாதங்களை வழங்க வேண்டும். அமெரிக்காவும் மேற்குலகும் எங்கள் பாதுகாப்பில் மூக்கை நுழைக்கப் போவதில்லை என்ற உத்தரவாதத்தை நீங்கள் எங்களுக்கு வழங்குங்கள்" என்ற மிக நியாயமான கோரிக்கைக்கும் அவர்களிடத்தே பதில் இல்லை. இப்போது இதன் பின்புலம் உங்களுக்கு ஓரளவு புரிந்திருக்கும்.

ரஷ்யாவின் ஒரே குறைந்தபட்சக் கோரிக்கை உக்ரைன் நேட்டோவில் இணையக்கூடாது. ஆனால் உக்ரைன் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அமெரிக்கா அதன் மண்டையைக் கழுவி வைத்திருந்தது. அதற்கான விலைதான் இன்று வரை உக்ரைன் சந்திக்கும் அத்தனை இழப்புகளும் இப்போது உக்ரைன் அதிபர் வெள்ளைமாளிகையில் சந்தித்த அவமானமும்!

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

## திசைகாட்டியை....

ஜனாதிபதித் தேர்தல் நிறைவடைந்து நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக வலி. வடக்கில் மக்களின் கோரிக்கையாக இருந்த 1.5 கிலோ மீற்றர் நீளமான பாதை பயன்பாட்டுக்கு மாத்திரம் விடுவிக்கப்பட்டது. இது மக்களிடத்தில் வரவேற்பை பெற்றது. எதிர்காலத்தில் தமது காணிகள் விடுவிக்கப்படும் என்ற எண்ணத்தை உருவாக்கியது. ஆனால், நாடாளுமன்றத் தேர்தல் நடந்து முடிந்து மூன்று மாதங்கள் நிறைவடையும் நிலையில் ஒரு துரும்புகூட நகராத நிலையில், மற்றைய சிங்கள ஆட்சியாளர்களைப் போல் தான் தேசிய மக்கள் சக்தியினரும் என்ற எண்ணத்தை உருவாக்கத் தொடங்கியிருக்கின்றது. இவை எல்லாவற்றுக்கும் அப்பால் மக்களுக்கு வெளிப்படையாகத் தெரியக்கூடியதாக, தங்கள் பதவிகளுக்காக சிறிதர் தியேட்டருக்கும், நல்லூர்க் கோவில் பின்வீதிக்கும் அலைந்து திரிந்தவர்கள், அந்த அரசியல்வாதிகளுக்காக எதையும் செய்தவர்கள் இப்போது தேசிய மக்கள் சக்தியினருடன் ஒட்டிக்கொண்டுள்ளனர். தியேட்டரிலி ருந்தும், நல்லூர் கோவில் பின் வீதியிலிருந்தும் கடந்த காலங்களில் வழங்கப்பட்ட பெயர்ப் பட்டியலுக்கு உதவிகளை வழங்கி, பாதிக்கப்பட்ட மக்களை நடுத்தெருவில் விட்ட உயர் அரச அதிகாரிகளும் தேசிய மக்கள் சக்தியினரின் வாலைப் பிடித்துக்கொண்டு இப்போது தொங்குகின்றனர்.

தேசிய மக்கள் சக்திக்கு இது தெரியாது விட்டாலும், மக்களுக்கு இப்படியானவர்கள் யார் என்பது தெரியும். காலத்துக்குக் காலம் கட்சி தாவும் நேர்மையற்ற இத்தகைய நபர்கள் மீதான அதிருப்தி தான் தேசிய மக்கள் சக்தி மீதான விருப்பாக மாறியிருந்தது. ஏனெனில், இப்படியானவர்கள் தங்கள் வயிற்றை வளர்ப்பதையும், தாங்கள் அதிகாரத்தை வைத்திருக்கவுமே விரும்பினர். அவர்கள் எத்தகைய பிழையான விடயங்களையும் செய்யத் தயாராக இருந்தனர்.

இப்படியான ஆதரவாளர்களை வைத்திருந்தமையும், தியேட்டர்காரரையும், நல்லூர் பின் வீதிக்காரரையும் மக்கள் வெறுக்கக் காரணமாக இருந்தது. அப்படி மக்கள் வெறுத்த நபர்கள் எல்லாம் இப்போது தேசிய மக்கள் சக்தி அலுவலகத்தில் முகாமிட்டிருக்கின்றனர்.

குறிப்பாக அரச நிர்வாகத்தில் வடக்கில் இன்னமும் மாற்றம் மேற்கொள்ளப்படவில்லை. யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா மாவட்டங்களில் மாவட்ட உயர்நிலை மற்றும் இரண்டாம் நிலைகளில் உள்ள அதிகாரிகள் தொடர்பில் மக்களிடத்தே நிறைய அதிருப்திகள் வெளிப்படையாகவே உண்டு. கடந்த கால ஆட்சியாளர்களுடன் சேர்ந்து, காணிகள் பிடித்தமை, அரச அபிவிருத்தித் திட்டங்களில் தரகுப் பணம் பெற்றமை, மக்களுக்கான நிவாரணங்களில் 'டீல்' பேசி கோடிக்கணக்கான பணம் சுருட்டியமை என்று இவர்கள் மீதான குற்றச்சாட்டுகளின் பட்டியல் நீண்டு செல்கிறது.

இப்படியாக ஊழல் செய்தவர்களும், மோசடி செய்தவர்களும் இன்னமும் பதவியில் தொடர அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். ஆகக் குறைந்தது அவர்களுக்கு எதிராக விசாரணைகளும் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக இவர்கள் தற்போது தேசிய மக்கள் சக்தியின் அமைச்சர்கள் அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்களோடு ஒட்டி உறவாடுகின்றனர். தேசிய மக்கள் சக்தியினரும் அவர்களை அரவணைத்துச் செல்கின்றனர் என்பதை நேரடியாகக் காணும் போது மக்களுக்குக் கட்சியின் மீதான நம்பிக்கை குறைவடைவடைந்துள்ளது.

இது வடக்கில் தேசிய மக்கள் சக்தியை ஆதரித்த அரசாங்கப் பணியாளர்களிடத்தில் விரக்தியை ஏற்படுத்தியிருக்கின்றது. விரக்திக்கு அப்பால் அவர்கள் ஏமாற்றமடைந்திருக்கின்றனர். தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வரவேண்டும் என நேர்மையாக விரும்பிய அதற்காக மக்களை ஆதரிக்கத் தூண்டிய அரசாங்க அதிகாரிகள் இன்று தேசிய மக்கள் சக்தியால் கைவிடப்பட்டுள்ளனர் என்று எண்ணுகின்றனர். தேசிய மக்கள் சக்திக்கு எதிராக கடந்த தேர்தல்களின் போது பணியாற்றியவர்கள் இப்போது தேசிய மக்கள் சக்தியின் அமைச்சர்களாலும், நாடாளுமன்ற உறுப்பினர்களாலும் தூக்கி வைக்கப்பட்டுள்ளனர்.

இதனால் ஏமாற்றமடைந்த அரசாங்கப் பணியாளர்கள் எதிர்வரும் தேர்தல்களில், 'யூ ரேர்ன்' எடுப்பதற்கே நிறைய வாய்ப்புக்கள் உள்ளன. அது நிச்சயமாக மக்களிடத்திலும் எதிரொலிக்கும். ஏனெனில் தேசிய மக்கள் சக்தியோடு தற்போதுள்ள எந்தவொரு அரசாங்க உயர் அதிகாரிக்கும், மக்களிடத்தில் செல்வாக்கு இல்லை. மாறாக மக்களிடத்தே அதிருப்திதான் உண்டு. அப்படிப்பட்டவர்களை கூட வைத்துக்கொண்டு உள்ளூராட்சித் தேர்தலை எதிர்கொள்வது என்பதென்பது தேசிய மக்கள் சக்திக்கு விஷப் பரீட்சைதான்.

ஒட்டுமொத்த நாடும் தேசிய மக்கள் சக்தியோடு நிற்கின்ற தோற்றம் உருவாகுவதற்கு வடக்கு மக்களே பிரதான காரணம். கடந்த காலத் தேர்தல்களிலும் தெற்கு மக்கள் சிங்களத் தேசியக் கட்சிகளோடு நின்றாலும் வடக்கு மக்கள் தமிழ்த் தேசியக் கட்சிகளோடு நின்றிருந்தனர். அந்த வரைபடத்தை மாற்றியமைத்த தேசிய மக்கள் சக்தி சிறிது காலத்திலேயே அதை இழக்கப் போகின்றதா? இல்லை 'கிளீன் சிறிலங்காவின்' கீழ் தம்மோடு ஒட்டியுள்ள 'ஒட்டுண்ணிகளை' கழற்றிவிட்டு வெற்றியைத் தொடர்ந்தும் தக்க வைக்கப்போகின்றதா? வரப்போகும் உள்ளூராட்சித் தேர்தல் முடியும் வரை காத்திருப்போம்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கப் பெண்பாற் கவிஞர்களின் பார்வையில் தமிழர் பண்பாடும் வாழ்வியலும்

## – ஓர் நோக்கு



06

பேராசிரியர் சிவேசன் சிவானந்தமூர்த்தி
சந்தைப்படுத்தல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

### காதலும் காமமும்

காதலின் பிரிவு, தவிப்பு, துயர் போன்றவற்றினை சங்ககாலத்துப் பெண்பாற் கவிஞர்கள் மிகவும் அழகாகவும், வாழ்வியல் யதார்த்தத்துடனும் காட்சிப்படுத்தியுள்ளார்கள். இதனைப் பின்வரும் சங்கப்பாடல் வரிகளின் வாயிலாக உணரலாம். காதல் என்றால் இரு மனங்களின் உணர்வுபூர்வமான அன்பின் வெளிப்பாடு ஆகும். அண்டம் முழுவதும் வியாபித்துள்ள பண்பாடுகளில் காதல் என்பது தெய்வீகமானதாகவும், புனிதமானதாகவும் நோக்கப்படுகின்றது. அறிவியல் ரீதியாக நோக்கில் பருவமுற்ற (பருவமடைந்த) ஆணும் பெண்ணும் ஒருவர் மீது ஒருவர் கொள்ளுகின்ற அன்பினைக் காதல் என்பர். காதல் என்றுமே ஆனந்தமானது. அவை என்றுமே சுமைகலந்த சுவை கொண்ட உணர்வாகும். அமெரிக்க உளவியல் சங்கம் காதல் என்பதனை ஒருவர் மற்றொரு நபர் மீது கொள்ளும் பாசம், மென்மையான உணர்வு, அவர்களின் செயற்பாடுகளுக்கான உணர்திறன், மற்றொரு நபரால் இன்பத்தினை அனுபவிப்பது, பக்தி போன்றவற்றினை உள்ளடக்கிய சிக்கலான உணர்ச்சியே காதல் என்று வரையறுத்துள்ளது.

காமம் என்பதனை பண்டைய தமிழ் இலக்கியங்களில் பாலின்ப விருப்பு, புணர்ச்சியின்பம், காமநீர் போன்ற பெயர்களினால் அழைத்தனர். காமம் என்பதனைச் சுருங்கக்கூறின் அது ஒரு புலன்சார்ந்த இன்பம் ஆகும். இந்துசமயத்தின்படி அறம், பொருள், காமத்தினை முறையாகப் பின்பற்றினால் வீடுபேறினை அடைந்துகொள்ள முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. பண்டைய தமிழர்கள் காதல், காமம் பற்றிய ஓர் தெளிவான புரிதலுடன் வாழ்ந்தார்கள் என்பதற்கு சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன. காமம் என்பதனை திருவள்ளுவர் திருக்குறளில் குறிப்பு அறிதல் என்னும் அதிகாரத்தில் உடல் ஒன்றுபடும் புணர்ச்சி என்கின்றார். அதே நூலில் 360 ஆவது குறளில் காமம் என்பதனை விருப்பம் என்கின்றார். இவற்றின்வழி நோக்கில் காமம் தவிர்த்துக் கொள்ளப்படவேண்டிய ஒரு குணமாக வள்ளுவரினால் பார்க்கப்படுகின்றது.

**காதல், காமம், பிரிவு போன்றவற்றினால் பெண்கள் மத்தியில் எற்படுகின்ற மாற்றங்களினை ஆண் கவிஞர்கள் வெளிப்படுத்துவதைக் காட்டிலும் பெண்கவிஞர்கள் மிகவும் நுண் உணர்வுகளுடன் வெளிப்படுத்தியுள்ளார்கள்.** எடுத்துக்காட்டாக ஆதிமந்தியார் என்கின்ற பெண்பாற் கவிஞரினால் இயற்றப்பட்ட "மன்னர்குழீஇய விழவினானும்" எனத் தொடங்கும் 31 ஆவது குறுந்தொகைப் பாடலினைக் குறிப்பிடலாம். தலைவி தன்னுடைய தோழிக்குத் தன்னைப் பெண் கேட்டு அயலவர் வருவதாகவும் ஆனால் நான் வீரர்கள் சூழ்ந்த சபையில் நடனமாடுகின்ற ஒரு நடனக்கலைஞனை விரும்பி இருப்பதாகவும், அவனைத் தான் காணமுடியாததால் ஆட்டம் நடைபெறுகின்ற இடங்கள்தோறும் சென்று அவனைத் தேடுவதாலும், அவன் குறித்த என் நினைவுகளின் மிகுநிலையால் உடல் மெலிந்தது, எனது வளையல்கள் எனது கையில் நிலைத்துநிற்காமல் அவை கைகளிலிருந்து நழுவி விழுகின்றன எனவும் தனது தலைவன் மீதான தவிப்பினை ஏக்கத்துடன் வெளிப்படுத்துகின்றாள். அதேவேளை தலைவன் மீது கொண்ட காதலின் வலிமையினை உணர்த்துகின்றாள். தான் எல்லா ஆடுகளங்களுக்கும் தலைவனைத் தேடிச்செல்வதனால் நானும் ஓர் ஆடுகள மங்கையானேன் (பரத்தை) என்கின்றாள். இப்பாடலில் சமூகம் ஆடுகள மங்கை எனத் தன்னை விழிக்கும் என்கின்ற அச்ச உணர்வும் அவளுக்கு ஏற்பட்டிருப்பது வெளிப்படுகின்றது. அதேவேளை தலைவனைப் பற்றி தோழியிடம் இயம்புகின்றபோது "மாண்தக் கோனை" என்றும் "குரிசிலும்" என்கின்ற இரு உயர்ச்சிமிக்க பதங்கள் பயன்படுத்தி உள்ளாள். இதன் மூலம் எவ்வளவு மானசீகமான ஓர் உயர்ந்தநிலையில் தன் தலைவனை வைத்து எண்ணுகின்றாள் என்பது புலப்படுகின்றது.

பிரிவுத் துயரினாலும், தோல்விகளில் துவண்டபோதும் சங்ககாலத்துப் பெண்கள் தம் வாழ்வியல் ஒழுக்க சிந்தனைகளில் முரண்படாதவர்களாகவும் காணப்பட்டனர் என்பதனை அறிந்துகொள்ளமுடிகின்றது. ஊண்பித்தையார் என்கின்ற பெண்பாற் புலவரின் 232ஆவது குறுந்தொகைப் பாடல்வரிகளில் பொருள் தேடச்சென்ற தலைவனைப் பிரிந்து தவிக்கின்ற தலைவியின் புலம்பலாகவே இப்பாடல் அமைகின்றது. பிரிந்து தவிக்கின்ற தலைவியின் தவிப்பினை யதார்த்தமாகப் பின்வரும் பாடலில் சித்தரித்துள்ளார். பொருள் தேடச் சென்ற தலைவன் அங்கிருந்துகொண்டு தன்னை நினைப்பாரா எனத் தலைவி அச்சம் கொண்டு தோழியிடம் வினாவுகின்றாள். சிக்மண்பிறைடின் கருத்துப்படி ஆளிடைக்கவர்ச்சியில் காதல் மனப்பாங்கு வளர்ந்து செல்வதில் அருகாமை முக்கிய காரணி ஆகும். அருகாமை வெறுமனே புவியியல் ரீதியான இருப்பிட ரீதியான நெருக்கத்தினை மட்டும் [illegible] தலைவி [illegible] அருகாமையாகும்.

(தொடரும்)

# ஊர்ப்புதினம்

பாகம் 3

இராகவன்

நான்மோட்டர் சைக்கிளுக்கு ட்றையல் காட்டி பாஸானதும், லைசன்ஸ் எடுத்ததும் அதிர்ஷ்டந்தான் எண்டாலும் அதுக்கு முதல் மெடிக்கல் எடுக்கேக்குள்ளை மூண்டு தரம் தொடர்ந்து பெயிலான சோகக்கதை உங்களுக்குத் தெரியாது. அதையுமொருக்கால் கேளுங்கோ. எனக்கு மற்றாக்களை மாதிரியில்லை. வலது கண்ணை மறைச்சால் இடதுகண்ணால பாக்கேக்குள்ள எல்லாம் மங்கலாத்தான் தெரியும். எனக்கு அரசாங்க உத்தியோகம் கிடைச்சு மெடிக்கல் எடுக்கப் போகேக்குள்ள கண்பார்வைப் பிரச்சினையிலயொரு சிக்கல் வந்து டொக்ரர் குகதாசன் 'செக்கப்' பண்ணின கதையெல்லாம் ஊர்ப்புதினம் இரண்டாம் பாகத்தில விலாவாரியாச் சொல்லியிருக்கிறன். அதால அதவிடுவம். இப்ப விசயத்துக்கு வாறன்.

லைஸென்சுக்கு மெடிக்கல் எடுக்கேக்குள்ளை நடக்கிற கண்பார்வைப் பரிசோதனையைப் பற்றி உங்களுக்கு வடிவாத் தெரிஞ்சிருக்கும். நோர்மலாக் கண்பார்வையைப் பரிசோதிக்கேக்குள்ள நேரடியாப் பார்த்து வாசிக்கச் சொல்லுவினம். ஆனால் லைஸென்ஸ எடுக்கிற மெடிக்கல் செக்கப்பில நேரடியாப்பாத்து வாசிக்கிறேல்ல. ஒரு கண்ணாடியில பார்த்துத்தான் வாசிக்கவேணும். நான் வலக்கண்ணால பார்த்து வாசிக்கேக்குள்ள ஒழுங்கா வாசிச்சன். ஆனால் இடக்கண்ணால வாசிக்கேக்குள்ள பெரிய எழுத்துக்களை மட்டுந்தான் வாசிக்க முடிஞ்சுது. மூண்டுதரமும் இதுதான் நடந்தது. மெடிக்கல் 'செக்கப் 'செய்த டொக்ரர் " கண் ஸ்பெஷலிஸ்ற்றிட்டக் காட்டி எல்லாம் கிளியர் பண்ணிக்கொண்டு வந்தால்தான் மேற்கொண்டு யோசிக்கலாம்" எண்டு சொன்னார். எனக்கு வெறுத்துப்போச்சு. போசாமல் இதோட எல்லாத்தையும் கைவிடுவமெண்டு யோசிச்சன். ஆனால் நண்பன் சித்திராதரன்தான் விடாப்பிடியா நிண்டு, " மாஸ்ரர் நீங்கள் பெரியாஸ்பத்திரியில சந்திரகுமார் டொக்ரரின்ரை கண்கிளினிக்கில பதிஞ்சு அவரிட்டக் காட்டுங்கோ!" எண்டு தள்ளிக்கொண்டுபோய் விட்டான். அதிலை ஒரு ரண்டுமாதம் அலையவேண்டி வந்தது. அங்கை செக்பண்ணிப் பாத்திட்டு உங்களுக்குக் கண்ணில ஒரு பிரச்சினையும் இருக்கிறதாத் தெரியேல்ல. எதுக்குமொருக்கால் பெரியய்யாவிட்டக் காட்டுங்கோ எண்டு கடைசியாச் சந்திரகுமார் டொக்ரரிட்ட விட்டினம்.

19

அவர் என்னைக் கனநேரமா ரெஸ்ற் பண்ணிப்போட்டு, "உங்களுக்கக் கண்ணில பாரதூரமான பிரச்சினையொண்டுமில்லை. இடக்கண்ணில சின்னவயதில லேசா ஏதோ அடிபட்டிருக்குது. எதுக்கும் ஸ்பெக்ஸ் போடுறது சேப்ரிதானே? " எண்டு சொல்லிக் கண்ணாடிக்கு எழுதித் தந்தார். அதன்படியே கண்ணாடியும் எடுத்துப்போட்டுக் கொண்டு சந்திரகுமார் டொக்ரரின்ரை றிப்போர்ட்டோடை திரும்பவும் மெடிக்கல் எடுக்கப்போனன். அந்த டொக்ரர் எல்லாத்தையும் வடிவாப் பாத்துப்போட்டு, "ம்... நாலாவது தடவையா வந்திருக்கிறீர். சரி! பாப்பம் " எண்டிட்டு ரெஸ்ற் பண்ணினார்.


அப்பவும் பழைய குருடி கதவைத் திறடிதான். அந்த டொக்ரருக்கும் என்னைப் பாக்க பாவமாயிருந்திருக்கும் போலை. "இடது கண்பார்வை கொஞ்சம் வீக்! கண்ணாடி போட்டுக்கொண்டு வாகனமோடலாம்" எண்டு எழுதி மெடிக்கலைத் தந்தார். அதைக் குடுத்து ஒரு மாதிரிக் கரைசேந்திட்டன். அதால என்ர ட்றைவிங் லைஸென்ஸில கண்ணாடி அடையாளம் போட்டிருக்கு. இதுவரைக்கும் என்ர லைஸென்ஸைப் பார்த்த ட்றபிக்காரர் அதைப்பற்றியொண்டும் கேக்கேல்லை. ஆனால் ஒரேயொருக்கால் ஒரு ட்றபிக்காரர் மட்டும் எங்க கண்ணாடி? எண்டு கேட்டவர். ஒரு மாதிரி சமாளிச்சுத் தப்பியிட்டன். இதுக்குள்ள ஒரு விசயம் சொல்ல மறந்திட்டன். அண்டைக்கு நான் ட்றையல் காட்டினாப் போல அதுக்குப் பிறகு வந்த சிங்கள எக்ஸாமினரிட்ட ட்றையல் காட்டினவை கனபேர் பெயில். அவர் அந்த அஞ்சு கேள்வியளும் கேட்டவராம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகவியலாளர்களை குறிவைத்து வேட்டை

(சென்றவாரத் தொடர்ச்சி)



## யசிதரன், வளர்மதி கைது



42

நீதிக்கான நெடும்பயணம்



**குற்றப்பத்திரம் தாக்கல்**

2008 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 11ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றத்தில் யசிகரனுக்கும் வளர்மதிக்கும் எதிராக பயங்கரவாத தடைச்சட்டம், அவசரகால ஒழுங்குவிதி ஆகியவற்றின் கீழ் நான்கு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு குற்றப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இதில் யசிகரன் மீது ழேசவா நுயளவநசா ஆழவொடல பத்திரிகையை அச்சிட்டு அரசுக்கு எதிராகச் சதிசெய்தமை, வெளிநாடுகளிலிருந்து புலிகளுக்காக நிதி சேகரித்ததாக மூன்று குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன. மேற்கூறப்பட்ட மூன்று குற்றத்தையும் புரிந்த யசிகரனுக்கு உதவி ஒத்தாசை வழங்கியதாக குற்றம் சாட்டப்பட்டு ஒப்புதல் வாக்குமூலமோ வேறு எந்தச் சான்றுகளோ இன்றி வளர்மதிக்கு எதிராக பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. திசநாயகத்திற்கு எதிராக தனித்தனியாக நான்கு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு குற்றச்சாட்டுப் பத்திரம் மேல் நீதிமன்றத்தில் சட்டமா அதிபரினால் (இனக்கலவரத்தைத் தூண்டும் விதத்தில் கட்டுரை வரைந்ததாக) தாக்கல் செய்யப்பட்டது. இதில் குறிப்பிடக்கூடிய விடயம் யாதெனில் யசிகரன், வள்ர்மதி, திசநாயகம் மூவருக்கும் ஒன்றோடு ஒன்று சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுக்களே சுமத்தப்பட்டன. திசநாயகத்துக்கு எதிராக அரசுக்குக் களங்கம் ஏற்படுத்தும் வகையில் கட்டுரை எழுதியதாகவும் யசிகரனுக்கு எதிராக அந்தக் கட்டுரையைப் பிரசுரித்தாகவும் மேலும் திசநாயகம், யசிகரன் ஆகியோர் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு உதவும் பொருட்டு வெளிநாட்டிலிருந்து நிதி பெற்றதாகக் குற்றச்சாட்டுக்களில் குறிப்பிடப்பட்ட போதிலும், இந்தக் குற்றச்சாட்டுகள் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்த குற்றச்சாட்டுகளாகக் காணப்பட்ட போதிலும் சட்டமா அதிபரினால் தனித்தனியாக இரண்டு குற்றச்சாட்டுப் பத்திரங்கள் வெவ்வேறு மேல்நீதிமன்றங்களில் தனித்தனியாகத் தாக்கல் செய்யப்பட்டன.


பொதுவாக ஒரு குற்றச்சாட்டின்; அடிப்படையில் கைது செய்யப்படுபவர்கள் ஒரே அறிக்கையின் கீழ் சந்தேகநபர்களாக பெயர் குறிப்பிடப்பட்டு நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படுவர். திசநாயகம், யசிகரன் வளர்மதி ஆகிய மூவருக்கும் எதிராக ஒரு கோவையின் கீழேயே நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. ஆனால் ஒரே செயற்கோவையாக அமைந்த குற்றச்சாட்டுக்களான கட்டுரையை எழுதிய திசநாயகத்தை எதிரியாக குறிப்பிட்டு நான்கு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு குற்றப்பத்திரம் 01ஆம் இலக்க மேல் நீதிமன்றிலும், கட்டுரையை பிரசுரித்த யசிகரனுக்கும் , அவருக்கு உதவி புரிந்ததாக வளர்மதிக்கும் எதிராக நான்கு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு 04ஆம் இலக்க மேல்நீதிமன்றிலும் குற்றப்பத்திரங்கள் சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்டன. பொதுவாக ஒரே தன்மையைக் கொண்ட ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்பட்ட பல செயல்களைக் கொண்ட ஒரு தொடர் வரிசையில் வரும் புரியப்பட்டதாக கூறப்படும் தவறுகளுக்கு அல்லது குற்றங்களுக்கு ஒரு குற்றச்சாட்டுபத்திரத்தில் மேல்நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்படமுடியும் . அவ்வாறு பல வழக்குகள் மேல்நீதிமன்றில் சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்டன; இன்றும் செய்யப்படுகின்றன. ஆனால் திசநாயகத்துக்கும் யசிகரனுக்கும் எதிராக இரண்டு வெவ்வேறு மேல் நீதிமன்றில் தனித்தனியாக குற்றச்சாட்டுப் பத்திரங்கள் சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்டமைக்கு சில காரணங்கள் இருந்திருக்கலாம். நோக்கம் என்னவாகயிருந்தாலும் இறுதியில் யசிகரனுக்கும் வளர்மதிக்கும் வழக்கில் இருந்து விடுதலையாவற்கு இரண்டு வெவ்வேறு நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்தது சாதகமாகவே அமைந்ததெனலாம்.

**திசாநாயகத்தின் குற்றஒப்புதல் வாக்குமூலம்**

கொழும்பு முதலாம் இலக்க மேல் நீதிமன்றத்தில் திசநாயகத்துக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு முதலில் நீதிபதி தீபாலி விஜயசுந்தர முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. திசநாயகத்தினால் சொந்த விருப்பத்தின் பேரில் தமிழில் எழுதிக் கொடுத்ததாகக் கூறப்பட்ட குற்றஒப்புதல் வாக்குமூலம் உண்மையில் அவரின் சுயவிருப்பத்தின் பேரில் கொடுக்கப்படவில்லை. இதனை எடுத்துரைத்து அந்தக் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் திசநாயகத்திற்கு எதிரான சாட்சியாகக் கொண்டு வரப்படுவதற்கு . திசநாயகத்தின் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி அனில் சில்வா நீதிமன்றில் எதிர்ப்புத் தெரிவித்தார். குற்றஒப்புதல் வாக்குமூலம் சுயமாகக் கொடுக்கப்பட்டதா? இல்லையா? என்பதைத் தீர்மானிப்ப தற்காக உண்மை விளம்பல் விசாரணை ஆரம்பமாகியது. இதில் ஒரு முக்கியமான விடயம் யாதெனில் திசநாயகம் ஆங்கில மொழியிலேயே பத்திரிகைகளுக்கு கட்டுரை எழுதுபவர். அதிகமான வேளைகளில் ஆங்கில மொழியில் உரையாடுபவர். ஆனால் திசநாயகத்தினால் சுயவிருப்பத்தின் பேரில் பொலிஸாருக்கு கொடுக்கப்பட்டதாக கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் தமிழில் சுயவிருப்பத்தில் கொடுக்கப்பட்டிருந்தது. இந்த விடயமும் நீதிமன்றில் சுட்டிக்காட்டப்பட்டது.

பயங்கரவாதப் பிரிவு பொலிஸாருக்கு தமிழில் கொடுத்த குற்ற ஒப்புதல் வாக்குமூலம் தனது சுய விருப்பத்தின்பேரில் கொடுக்கப்படவில்லை என திசநாயகம் தனது சாட்சியத்தில் கூறியபொழுதிலும் அந்த சாட்சியத்தை ஏற்றுக் கொள்ளாத மேல் நீதிமன்ற நீதிபதி தீபாலி விஜேயசுந்தர. திசநாயகத்தின் சாட்சியத்தை நிராகரித்தார். குறித்த குற்ற ஒப்புதல் வாக்குமூலம் திசநாயகத்தினால்; சுயவிருப்பத்திலேயே கொடுக்கப்பட்டதாக உண்மை விளம்பல் (ஏழசை னுசைந) விசாரணையின் முடிவில் நீதிபதி [illegible]

(தொடரும்)




## போரின் கவிதை 2

## நிர்மலா, நித்யா.. நிம்மி

கழிப்பறையாகிய அவர்கள் கர்ப்பப்பைகள்
புத்தியைத் தொலைத்த பெண்கள்..
அவர்களோ....
புதைகுழிகளைத் தோண்டி
புதையல் தேடுகின்றார்கள்.
இரவின் காக்கைகளாக...
இறப்பின் இருப்புக்களை
தேடிக் களைத்த தேவதைகள்...
வானம் விடிந்தால்- வாழ்வும்
விடியும் என்று கனவுகாணும்
கண்ணீர்பிடித்த பிண்டங்கள்..
இவர்களை உருட்டி வைத்ததால்...
இந்த உலகம்
உருள்கின்றது
யாருக்கும் அகப்படாத புதையல்கள்
இவர்களுக்கு மட்டும்..
இலகுவாகக் கிடைத்ததெப்படி?
இவர்கள் தோண்டிய விதம் அப்படி
உரக்கச் சொல்லிப் பார்...
இந்த ஊமைக் குழந்தைகள்
கண் விழிப்பதற்கு முன்னே
காலம் கசக்கி எறியப்பட்டவர்கள்.
தொடுவானம் முழுவதும்
நீலக் கீறல்களாய்& இவர்களின்
உயிரில் விறாண்டல்கள்...
வன்மங்களை வெளிப்படுத்தி
இன்பங்களை காண்பவர்களுக்காய்
இவர்கள் விற்கப்பட்டவர்கள்..
விலை பெறாத பயனாளிகள்.
தண்டனைகளாக...
இவர்களை இங்கே புதைத்திருக்கிறார்கள்.
காயங்களின் வலிக்கு...
கீறிக்கீறியே
விரல்களில் இரத்தக்கறைகள்...
காமங்களின் கழிப்பறைகளாக.
இவர்களின் கர்ப்பப்பைகள்
விலைபேசப்பட்டன..
குப்பைகளாகிய விந்தணுக்களை வாங்கி
பெயரில்லாக் குழந்தைகளை
நாளை இவை பிரசவிக்கப்போகின்றன

இவர்களின் பாதுகாவலர்கள்
யார் ??
உயிரோடு புதைக்கப்பட்டவர்களின்
உடல்களைத் தினமும்
தோண்டித் தோண்டி
புதையல் எடுக்கும் அவர்கள் உண்மையில்
புத்திசாலிகள்.

ஆனந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் கைவண்ணம்



**ற.அஸ்மிகா**
தரம் 4
யா /சாவகச்சேரி இந்து
ஆரம்ப பாடசாலை



**தி.பபிஸ்**
தரம் - 9A
யா/பரியோவான்
கல்லூரி




## மாணவர்களே!

நீங்களும்
உங்கள்
கைவண்ணங்கள்,
ஆக்கங்களை
அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி!


உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555



**கே.ஜனார்த்தன்**
தரம் 8
யா /யா/கொக்குவில்
இந்துக் கல்லூரி




**சி.ஆதித்தியன்**
தரம் - 8c
யாழ்.இந்துக்
கல்லூரி




**கே.ஜனார்த்தன்**
தரம்7
கொக்குவில் இந்துக்
கல்லூரி



**பா.ரஜிஷன்**
தரம் 6
யாழ்ப்பாணம் மத்திய
கல்லூரி.



**ர.சாணக்கியன்**
தரம்7A
யா/உடுப்பிட்டி.அ.மி.
கல்லூரி



**சு. கேதுகன்**
தரம் 4A
யா/சாவகச்சேரி மகளிர்
கல்லூரி



**A. வைஷ்ணவி**
தரம் 7
யா/மகாஜனக்
கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org